விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி07 வியாழக்கிழமை (24.10.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 309

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT



## வன்னியில் வரலாற்று முக்கிய நிகழ்வு

# தலைவர் பிரபாகரனுடன் நேற்று நோர்வே அமைச்சர் குழு சந்திப்பு

### பாலா, தமிழ்ச்செல்வன் உடனிருந்தனர்

(கிளிநொச்சி நிருபர்)

❖ தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான உயர்மட்டக்குழு நேற்று முதன்முறையாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

❖ வட-கிழக்கில் தற்போது காணப்படும் அரசியல் நிலைவரம்

❖ கிழக்கில் காஞ்சிரங்குடா மற்றும் திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைகள்

❖ அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்த [illegible]

### 2ம் கட்ட தாய்லாந்துப் பேச்சில் தமிழ்ச்செல்வனும் பங்குபற்றுவார்

(கிளிநொச்சி)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் இம் மாதம் 31ம் திகதி நடைபெற வுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்லும் போது அவருடன் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

(கிளிநொச்சி நிருபர்)

- ❖ தமிழீழ வடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான உயர்மட்டக்குழு நேற்று முதன்முறையாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.
- ❖ வட-கிழக்கில் தற்போது காணப்படும் அரசியல் நிலைவரம்
- ❖ கிழக்கில் காஞ்சிரங்குடா மற்றும் திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைகள்
- ❖ அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்த செயலணிக்குழுவின் நியமனம்
- ❖ அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு

ஆகியன தொ ர் பாக இப் பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப் பட்டுள்ளது

யாழ்ப்பாணம் வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் நேற்று முன் தினம் இரவு ஏ-9 கண்டி வீதியூடாக கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்து ஒரு கட்டப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதனை அடுத்து நேற்றுக்காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கீசன் தலைமையிலான உயர்

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனும் பங்குபற்றுவார்

(கிளிநொச்சி)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் இம் மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்லும் போது அவருடன் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் இன்று பிரதமரைச் சந்திப்பார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றைய தினம் வன்னியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் தலைமையிலான குழுவினர் இன்று காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச சந்தித்துப் பேசவுள்ளனர்.

தலைவர் பிரபாவுடன், இரண்டாம கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஆராய்ந்த விடயங்களை ஹெல்கீஸன் பிரதமர் ரணிலுக்கு விளக்கிக் கூறவுள்ளார்.

இச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், சமாதான செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.குடா நாட்டு மீனவர்கள் எந்நேரமும் கரைதிரும்ப அனுமதி

## கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இரவு வேளைகளில் கடலுக்கு செல்லும் மீனவர்கள் எந்நேரத்திலும் கரைதிரும்புவதற்கு அனுமதி வழங்குமாறு கடற்படை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த போது மீனவர்களின் பிரச்சினைகளை நேரில் சென்று கேட்டறிந்த போது இரவு நேரம் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் காலை 6மணிக்குப் பின்பே கரை திரும்ப அனுமதிக்கப்படுவதாகவும், தற்போதைய மழை காலத்தில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளை புயற்காற்று, வீசினாலும் அல்லது மழை பெய்தாலும் 6 மணிக்கு முன் கரை திரும்ப அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நேற்று அமைசசர் மிலிந்த மொறகொடவை சந்தித்து பேசியபோதே மீனவர்கள் எந்த நேரத்திலும் கரைதிரும்பலாம் என்ற அனுமதி கிடைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் அனுமதி தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து உடனடியாகத் தனக்கு அறிவிக்குமாறு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். (ந-5)

# புளொட் உறுப்பினர் ஜெயா நீதி மன்றில் ஆஜர் செய்யப்படுவார்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் உடலும் யாழ்ப்பாணத்தில் தலையும கண்டெடுக்கப்பட்ட கொலை தொடர்பாக சந்தேக நபரைக் கைது செய்யுமாறு பருத்தித்றை நீதவானால் 1999ல் விடுக்கப்பட்ட பிடிவிறாந்திற்குரியவர் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஜெயச்சந்திரன்(ஜெயாமாஸ்டர்) என்று இனங்காணப்பட்டதையடுத்து இன்று பருத்தித்துறை நீதி மன்றதில ஆஜர்ப் படுத்தப்படவுள்ளார்.

இதற்கான உத்தரவை யாழ். சிறைச்சாலை அதிகாரிக்கு யாழ். நீதவான் இ.த.விக்கினராஜா நேற்றுப் பிறப்பித்துளார்.

1999ம் ஆண்டு இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு அவரது உடல் நெல்லியடியிலும், தலை யாழ்ப்பாணத்திலும் போடப்பட்டிருந்த சம்பவம் குடாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை தெரிந்ததே. (ம-6)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மானுடத்தின் தமிழ்க் கூடல் -2002 பிரகடனம்

## அறிஞர்களின் ஆதரவோடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் விடுதலைப் புலிகளின், கலைப் பண்பாட்டுக் கழகம் நிதர்சன நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்திய மானுடத்தின் தமிழ் கூடல்- 2002 மாநாட்டின் முடிவு தினமான நேற்று முன் தினம் மாலை தமிழ்க் கூடல் பிரகடனம் ஒன்று கலந்து கொண்ட பேராளர்கள், பார்வையாளர்கள் கட்டுரையாளர்களின் ஏகோபித்த ஆதரவோடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மானுடத்தின் தமிழ்க் கூடல்- 2002 இல் 4 நாட்களும் கலந்து கொண்ட பேராளர்களின் ஆலோசனைகளைப் பெற்ற, இப் பிரகடனத்தை சுற்றுச் சூழலியலாளர் பொ. ஐங்கரன் வாசித்தார்.

இதில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களாவன,

● தமிழ் மக்களின் விடுதலையை எல்லாத் தளங்களிலும் முழுமைப்படுத்துவது, இதில் உலகெங்கும் உள்ள தமிழர்களின் ஒருங்கிணைப்பைப் பெறுவது

● இரண்டாயிரம் ஆண்டு கால செய்யுள் பாரம்பரியம் உடைய தமிழ் மக்களாகிய நாம் தமிழ் விழிப்பையும் தமிழ்வேர்களையும் மூன்றாவது மில்லெனியத்திற்கு விரிவுபடுத்தல

● உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கான 'தமிழ் மையம்' ஒன்றை ஈழத்தில் நிறுவுதல்.

தமிழ் தேசியம் எதிர்கொள்கின்ற அரசியல் பண்பாட்டு, நெருக்கடி, நிலைகளில் இருந்து விடுபடுவதற்கான சமூக சிந்தனை முறைமைகளை உருவாக்குவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்குமான 'சிந்தனைப் பள்ளியை கட்டமைத்தல்' இதற்கு வேண்டிய துறைசார் நிபுணர்களை ஒருங்கிணைத்தல.

● உலகமயமாக்கல் சூழலில் தமிழ், முஸ்லிம் மக்களின் பண்பாட்டு அடையாளங்களைப் புதுப்பித்தலும் பாதுகாத்தலும்.

● தமிழ்- சிங்கள தொடர்பாடலை பரஸ்பர மொழி பெயர்ப்புக்களின் மூலம் வலுப்படுத்தல். போருக்குபிந்திய காலத்தின் உடனடித் தேவையாக வடக்கு-கிழக்கின், அனைத்துப் பகுதிகளிலும் எல்லாவகையான வெளிப்பாட்டு வடிவங்கள் பற்றிய ஆவணப் படுத்தலையும் பாதுகாத்தலையும் உடனடியாகச் செயற்படுத்தல் இதில் நாட்டார் பாடல் தொடக்கம் அரும்பொருட்கள் வரை அடங்கும்.

● அழிந்தும், அருகியும் செல்லும் நிலையில் இருக்கும் பாரம்பரிய கலை வடிவங்களையும், புராதன சின்னங்களையும், அடையாளம் கண்டு மீட்பதற்கும் பாதுகாப்பதற்குமான நிறுவனமயப்பட்ட ஏற்பாடுகளை திட்டமிடுவதும் நடைமுறைப் படுத்துவதும்.

● ஆண்டு தோறும் இத்தகைய தமிழ் கூடலை வெவ்வேறு இடங்களில் தொடர்ந்து ஒழுங்கு செய்தல்

● இவையாவையும் நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் மக்களுடைய இராணுவ நெருக்கு வாரமற்ற மெய்யான இயல்பு வாழ்வு இன்றியமையாதது ஆகும்.

அதனை ஏற்படுத்தும் முயற்சிகளை அனைத்து ஊடகவியலாளர்களும் கலை இலக்கிய வாதிகளும் முன்னெடுத்து ஒன்றிணைந்து செயற்படுதல். (உ-10)

### ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணியளவில் அப்பேரவையால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் வெளியிடப்படவுள்ளது. (உ-8)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்றுகை அமைச்சின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள வடக்கு - தெற்கு மாணவர்களின் கலைச் சங்கம் நிகழ்வுதொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-6)

# வடக்கில் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தை சிங்களப் பத்திரிகைகள் பிரசுரிக்க தவறிவிட்டன

## ஹிரு பத்திரிகையாளர் அபயவர்த்தன ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களது மொழி உரிமை, தொழில் உரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டது.

இவ்வாறு சிங்கள நாளிதழான ஹிரு பத்திரிகையின் ஆசிரியர்பீடத்தைச் சேர்ந்த றோகித அபயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் -2002 இன் இறுதிநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறுகூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இரத்தக்கறை படிந்த மண்ணில் நின்று உங்கள் முன் பேசுவதற்காக முதலில் மன்னிப்புக் கோருகிறேன்.

தமிழ் மக்களை சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக முழு அளவில் திருப்பிவிட்டது 83 யூலைக்கலவரமே. அப்போது எனக்கு வயது 13. தமிழ் இளைஞர்கள் வீதிகளில் உயிரோடு எரிக்கப்பட்டதை என் கண்ணால் கண்டேன். அந்த வடுக்கள் இன்னும் மாறவில்லை. வீதி ஓரங்களில் தமிழர்களின் சடலங்கள் அரைகுறை ஆடைகளுடன் வீசப்பட்டிருந்தன. இந்தக் கொடுமைகளை மக்கள் முன் கொண்டுவருவதற்கு சிங்களப் புத்திஜீவிகள் பின்னடிக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள், வன்முறைகள் 1970களின் இறுதிப் பகுதிகளில் இருந்து மிக உக்கிரமடைந்தன.

தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் கைதுசெய்யப்பட்டு கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் அப்போது ஆஜர் செய்யப்பட்டனர்.

அதன் போது, ஆனையிறவிலுள்ள இராணுவ முகாமை அம்பாந்தோட்டையில் கொண்டு வந்து நிறுத்துவோம் என குட்டிமணி உணர்ச்சிததும்பக் கூறியிருந்தார் அதுஇப்போது நிதர்சனமாகியுள்ளது.

1995ம் ஆண்டு நவாலி சென்பீற்றஸ் தேவாலயம் மீது இலங்கை விமானப்படை குண்டுத்தாக்குதல் நடத்தியது அதனபோது சிறுமி ஒருத்தி உடல்சிதறி உயிரிழந்து கிடக்கும் காட்சியை எமது பத்திரிகை பிரசுரித்தது. இதனைத் தொடர்ந்து புலிகளுக்கும் எமக்கும் தொடர்பு இருப்பதாக சிலசிங்களப்பத்திரிகைகள் செய்திவெளியிட்டன ராவய பத்திரிகையும் நவாலிசம்பவம் தொடர்பான செய்தியைப் பிரசுரித்தது.

வேறுஎந்தச் சிங்களப் பத்திரிகைகளும் அந்தச்செய்தியைப் பிரசுரிக்கவில்லை. இவைஒருபுறமிருக்க 1995ம் ஆண்டு நாகர்கோவிலில் மாணவர்கள் மீது விமானத் தாக்குதல் நடந்தசெய்தியை கொழும்பிலுள்ள ஆங்கில நாளிதழ் செய்தித்தணிக்கைப் பிரிவுக்கு அனுப்பியது அச்செய்தியை பிரசுரிக்க முடியாது எனத்தடை செய்யப்பட்டது.

அப்பொழுது அந்தப்பத்திரிகையின் ஆசிரியர் எம்முடன் தொடர்பு கொண்டுநிலைமையை விளக்கினார்.

உடனடியாக அந்தச்செய்தியை எந்தமாற்றமும் இன்றி சிங்களத்தில் எழுதி தணிக்கைப்பிரிவுக்கு அனுப்பிவைத்தோம் அந்தச் செய்தி பிரசுரிப்பதற்குத் தடைசெய்யப்படவில்லை இதிலிருந்து தணிக்கைப்பிரிவு எவ்வாறு செயற்பட்டது என்பது தெட்டத்தெளிவாகிறது. அதேவேளை வடக்குக்கிழக்குப் பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்களும் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை.

சிங்களப்பத்திரிகை ஒன்றில் புலிகள் தொடர்பான கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது அக்கட்டுரையை வரைந்த நபர் தான் கிழக்குமாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று வந்ததாகவும் அங்குள்ள விடுதலைப்புலிகளின் பெண்கள் முகாமில் ஒவ்வொருநாளும் காலையில் தேநீருக்குப்பதிலாக ஒருரம்ளர் இரத்தம் வழங்கப்படுவதாகவும் கூறியிருந்தார்.

புலிகள்இரத்தவெறிபிடித்தவர்களாகத் திரிகின்றார்கள் அவர்களை நம்பமுடியாது என்று அப்போது கூறினார்கள் இப்போதும் அதையேதான் கூறிவருகின்றார்கள் என்று அவர்தனது ஆதங்கத்தை வெளியிட்டார். (த)

# தமிழ் மக்களின் போராட்டத்தை உளப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்

## ராவய பத்திரிகையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உளப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். இவ்வாறு சிங்கள நாளிதழான ராவய பத்திரிகையின்ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பஞ்சுள வெடிவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில மானுடத்தின் தமிழ்க் கூடல்- 2002 இன் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இன ஒடுக்கு முறையும் சிங்களப் பத்திரிகைகளும் என்ற தலைப்பில் அவர் தொடர்ந்து உரையாற்றியபோது,

போராட்டம் நடந்த மண்ணில, இரத்தக்கறை படிந்த மண்ணில உங்கள் முன் நின்று பேசுவதற்காக உங்களிடம் அனுமதி கேட்கிறேன். உங்கள் முன் நான் ஒரு குற்றவாளியாகவே நின்றுகொண்டிருக்கின்றேன். அதற்காக உங்களிடம் மன்னிப்புக்கோருகின்றேன் குற்றவாளிகளுக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்குவது உண்டு அதில் ஒன்றாகவே இச்சந்தர்ப்பத்தை நான் கருதுகின்றேன்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒபபந்தம் கைச்சாத்திடப் பட்டதைத் தொடர்ந்து 100 விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வருகிறார்கள். ஜே.வி.பியை அடக்கவே இவர்கள் கொழும்புக்கு வருகிறார்கள். பிரதமர் ரணில் இதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளார். கொழும்புக்கு வந்த புலிகள் எனக்கூறி இரண்டு தமிழ் இளைஞர்களின் படங்களையும் லக்பிம பத்திரிகை பிரசுரித்தது.

அந்த இளைஞர்கள் இருவரும் என்னுடன் நெருங்கிய நண்பர்கள். ஊடகத்துறையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் இவ்வாறு உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஒரு சிங்களப் பத்திரிகை பிரசுரிகிறது அதனை சிங்களமக்கள் நம்புகிறார்கள்.

மலையகப் பெண்ஒருவர் கொழும்பில் பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் கற்பழிக்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட பெண் உண்மையில் புலிஎன்றும் புலிகளே அப்பெண்ணை கொழும்புக்கு அனுப்பிவைத்தனர் என்றும் திவயினப்பத்திரிகை கூறியது.

அத்துடன் நின்றுவிடவில்லை விபச்சாரப் புலிப்பெண் ஒருவரையே புலிகள் கொழும்புக்கு அனுப்பிவைத்தனர் எயிட்ஸைப் பரப்புவதேஅவர்களின் நோக்கம் என்றும்கூறியது.

எனக்குத் தெரிந்தவரையில் அப்பெண்வறுமைகாரணமாகவே கொழும்பு உணவகம் ஒன்றில் தொழில்புரிந்தார் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் அப்பெண் கற்பழிக்கப்பட்டதைவிட சிங்கள ஊடகங்களாலேயே அவர் மிகமோசமாகக் கற்பழிக்கப்பட்டார் சில சிங்கள ஊடகங்கள்செய்ததுரோகத்தால் அந்தஉணவகமும் மூடவேண்டியநிலை ஏற்பட்டது.

இதுமட்டுமன்றி படைவீரர் நினைவுநாளுக்கான நிதிசேகரிப்பில் ஈடுபட்டிருந்த அமைச்சர் சி.வி குணரத்தின தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் பின்னர் சிங்களப்பததிரிகை ஒன்றுவெளியிட்ட தகவலைத் தொடர்ந்து அப்பாவிஇளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு இனவாதப்போக்குடைய சிங்களப்பத்திரிகைகளும் ஆட்சிப்பீடங்களும் செய்யும் கொடுமைகளால் நான் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கின்றேன் நான்வெளியிட்ட முதலாவது சிறுகதைத் தொகுதியும் சட்டவிரோதமானது என தடைசெய்யப் பட்டது.

யாழ்ப்பாணம் வரும்போது வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம்வரையிலும் யுத்தத்தின் கொடூரத் தாண்டவத்தைக் கண்டு அதிர்ந்துபோனேன் இவ்வாறுமஞ்சுளவெடிவர்த்தனா மேலும் கூறினார். (த)

# புலிகளின் நீதிப் பிரிவில் முஸ்லிம்கள் நம்பிக்கை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்கள் தமது வழக்குகளை அங்கு இயங்கிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி மன்றங்களில் தாக்கல் செய்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்பவர்களின் அழைப்பாணைகளை வழக்குடன் தொடர்புடையவர்களுக்கு கிராமசேவை அலுவலர் ஊடாக அனுப்பி வைக்கப்படுவதாகவும்,

குடும்பத்தகராறு, பணக் கொடுக்கல் வாங்கல் போன்ற வழக்குகளேஇந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வருவதாகவும் நீதிமன்ற வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ-8)

# யாழ். குடாநாட்டில் சிறந்த விவசாயிகளாக 36 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இவ்வாண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு முடிவடைந்துள்ளது.

12விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக நெல், உப உணவு,வதிவிட வேளாண்மை என்ற வகைப்படுத்தல்களில் 36பேர் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு;

புங்குடுதீவு

சி. பொன்னுத்துரை 2ம் வட்டாரம் நயினாதீவு, க.சத்தியகுமார் 4ஆம் வட்டாரம் நெடுந்தீவு, கை. ஸ்ரீஸ்காந்தன் 1ஆம் வட்டாரம் புங்குடுதீவு

வேலணை

திருமதி. த.சிவகுமார் தங்கோடை காரைநகர், கா. தவபாலன் சரவணை கிழக்கு வேலணை, த. மணிவண்ணன் நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை

நல்லூர்

சி. புஸ்பராசா இல; 126, ஏ, பி, வீதி அரியாலை, இ. ஸ்ரீஸ்கந்தராசா குமர கோட்டம் கோண்டாவில், தெ. ஜீவரத்தினம் இல. 52 செபஸ்தியன் வீதி பாஷையூர்

தொல்புரம்

ஆ. இராசதுரை சுழிபுரம் கிழக்கு, ச. யோகேஸ்வரன் ஆலமோடை சுழிபுரம் மேற்கு, செ. ஞானமுத்து அராலி மத்தி.

உடுவில்

செ.சண்முகநாதன் உடுவில் கிழக்கு சுன்னாகம், திருமதி ச. நவரத்தினராசா குப்பிளான் தெற்கு ஏழாலை, செ. தயாபரன் கே.கே.எஸ். வீதி இணுவில் கிழக்கு

சாவகச்சேரி

க. தியாகராசா வரணி வடக்கு, ந. தெய்வேந்திரன் அல்லாரை வடக்கு கொடிகாமம், பொ. ஸ்ரீக்குமார் கெற்பேலி மத்தி மிருசுவில்

கைதடி

வா. சின்னத்தம்பி கைதடி வடக்கு, நா. சிங்கராசா கைதடி வடக்கு, ஆ. இராசரத்தினம் கைதடி கிழக்கு

புத்தூர்

செ. பத்மநாதன் காளியானை கிழக்கு புத்தூர், ஐ. குணசேகரம் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி, மா. செல்லத்துரை அச்சுவேலி தெற்கு அச்சுவேலி;

புலோலி

அ. அற்புத அருந்தவராசா பிலக்கடை கரவெட்டி, து. துரைராசா மயிலியந்தனை கெருடாவில் வடக்கு, சி.சிவயோகநாதன் விக்னேஸ்வரா வீதி கரணவாய் கிழக்கு.

அம்பன்

ப. ராஜ்குமார் அம்பன், சி. பேரம்பலம் வத்தராஜன் தெற்குதாழையடி,ச.ஸ்ரீதரன் குடத்தனை மேற்கு

கீரிமலை

ந. கமலநாதன் புலவதகை அளவெட்டி, சி குணசேகரம் மதவடி ஒழுங்கைஅளவெட்டி, ஆ. கதிரவேலு திரேசம்மா கோவிலடி சண்டிலிப்பாய்.

உரும்பிராய்

செ. பரமநாதன் குழுக்கண்டி ஒழுங்கை இருபாலை, த. இராமச்சந்திரன் ஊரெழு கிழக்கு சுன்னாகம், து. இரத்தினசிங்கம் இலகடி கோப்பாய்

(உ)

## தொழில்வாய்ப்பு விண்ணப்பபடிவம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இதுவரை தொழில் அமைச்சின் தொழில் வாய்ப்பு விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்யாத பட்டதாரிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மாரியம்மன் வீதி திருநெல்வேலியில் இருக்கும் பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் தொழில்வாய்ப்பு விண்ணப்பத்தை பெற்று பூரணப்படுத்திக் கொடுக்கலாம் எனவும்.

புதிய அங்கத்தவராக இணைய விரும்புபவர்களும் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி கொடுத்து இணைந்து கொள்ளலாம் எனவும் யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் வே. மணிமாறன் கேட்டுள்ளார். (உ)

# ஜனாதிபதி-விடார் சந்திப்பு நேற்று இடம்பெறவில்லை

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கீசன் தலைமையிலான தூதுக்குழுவினருடனான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் சந்திப்பு நேற்று திட்டமிட்டவாறு இடம் பெறவில்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டு வரும் சமாதானச்சூழல் தொடர்பாகவும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர்ப்பாகவும்நேற்று மாலை ஜனாதிபதியுடன் நோர்வேக்குழு பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தது.

அமைச்சரவைக் கூட்டம் காரணமாகவும் நுகேகொடையில் நடைபெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணி, அரசுக்கு எதிராக நடத்திய கூட்டம் காரணமாகவுமே ஜனாதிபதி நோர்வே வெளியுறவு அமைச்சரை சந்திக்க முடியாமல் போயுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்த பின்னர் ஜனாதிபதியை இக்குழுவினர் சந்திக்கஇருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆரம்ப கணித செயலமர்வுகளில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ-6)

# அரசியல் நிலைமைகளை ஆராய்ந்தே அடுத்த கட்ட நடவடிக்கை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

18,19 வது அரசியல் அமைப்பு சீர்திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அடுத்துவரும் அரசியல் நிலைமைகளை ஆராய்ந்தபின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கப்படும் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இத்திருத்த சட்டமூலம் குறித்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக ஊடகவியலாளர்கள்மத்தியில்பேசும் போது பிரதமர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

பிரதமர் ஊடகவியலாளர் மத்தியில் மேலும்தெரிவிக்கையில்; 18 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலம் அரசியலமைப்பு சபையின் வேண்டுகோளுக்குஇணங்கவே கொண்டுவரப்பட்டது.

இத்திருத்தம் தொடர்பான கோரிக்கைகள் கட்சித்தலைவர்கள்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுஅனுமதி பெறப்பட்டதன் பின்னரே அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது

பின்னர் அமைச்சரவையிலும் இத் திருத்த சட்டமூலத்திற்கு அனுமதி பெறப்பட்டதை அடுத்தே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேவேளை 19 வது திருத்தச் சட்ட மூலம் அமைச்சரவை அங்கத்தவர்கள் சிலரினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் நாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5,8)

பேராதனைப் பல்கலைக்கழக

## வெளிவாரிப் பிரிவு சீல் வைத்து மூடப்பட்டது

(கண்டி)

கண்டி பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவு சீல்வைத்துமூடப்பட்டுள்ளது.

இவ்வெளிவாரிப் பரீட்சைப் பிரிவில் பரீட்சை விடைத்தாள்களை பரிசீலிக்காமல் பெறுபேறுகள்வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும்சம்பவத்தையடுத்தே அரசாங்க கணக்காய்வாளர் பிரிவு அதிகாரிகள் இப்பிரிவுக்குசீல்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

அரசாங்க கணக்காய்வாளர் அதிகாரிகள்கடந்ததிங்களன்று இப்பிரிவிற்குத் திடீர்விஜயம் மேற்கொண்டு அங்கு விடைத்தாள்களை பரிசீலித்த போது அவ்விடைத்தாள்கள் கணிப்பீடு செய்யப்படாமல் பெறுபேறுகள்வெளியிடப்பட்டமை தெரியவந்துள்ளது. (உ)

# தற்போதைய சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்படக்கூடாது

## கூட்டமைப்பு பிரதமரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

காஞ்சிரங்குடா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் சுதந்திர விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால் பிரதமரிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவை தமிழ்த் தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்த போதே இக் கோரிக்கை விடுக்கப்பட்டதாககூட்டமைப்பின்சிரேஷ்ட உபதலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராசசிங்கம்தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது இதே போன்ற சம்பவங்கள் மேலும் தொடராமல் இருப்பது தடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாகவும்,

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான நடவடிக்கைகள் எவ்வித காரணங்களுக்காகவும் பின்னடைவு ஏற்படாது பார்ப்பதுடன்,

திருகோணமலையில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில்பிரதமருடன் உள்துறைஅமைச்சரும் கலந்து கொண்டார்.

கூட்டமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர் சம்பந்தன்அ.விநாயகமூர்த்தி,ஜி ஜி கஜேந்திரகுமார்என் ரவிராஜ் வீ தங்கவடிவேல் ந.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-8)

## ஊனமுற்றவர்களுக்கு ஜேர்மனியர் உதவி

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாட்டு மக்களின், ஊனமுற்றவர்களுக்கான அன்பளிப்புக்களை விநியோகிக்கும் வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஜேர்மனைச் சேர்ந்த கொடையாளி ஹான்ஸ்டென்ஸ் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எனவே, இவ் உதவிகளைப் பெறுவதற்குப் பொருத்தமான ஊனமுற்றவர்கள் மற்றும் ஊனமுற்றோர் நலன் பேணும்நிறுவனங்கள் என்பவற்றை உரிய விபரங்களை ஜி. ரிச்சற் நிறுவனத்தின் இல: 11,கண்டிவீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளன.

மேற்படி கொடையாளி ஹான்ஸ் டென்ஸ், கடந்த வருடமும் இவ்வாறான உதவிகளை, ஊனமுற்றவர்களை நாடிச்சென்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (உ)

மானுடத்தின் தமிழ்க்கூடல்-2002

## ஞாபகார்த்தமாக மரக்கன்றுகள் நாட்டல்

(தென்மராட்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்திய 'மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002ன்' நிகழ்வின் இறுதிநாளான நேற்று முன்தினம் மாநாட்டின் நிகழ்வாக யாழ். வீரசிங்கம்மண்டபம் முன்பாகஉள்ள தமிழாராட்சி மாநாட்டின்போது உயிரிழந்தவர்களின் நினைவுச் சின்னம் அருகில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

நாட்டுப் பற்றாளர் இராசலிங்கத்தின் மனைவி இ. வள்ளியம்மை முதலாவது மரத்தை நாட்டிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து 'ராவய' பத்திரிகையின் ஆசிரியபீடத்தைச்சேர்ந்த மஞ்சுளவெடிவர்த்தனேயும், மன்னார் மாவட்டக்கலைஞர் செபஸ்ரியன் செபமாலையும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் ஏ. எல். எம். சலீமும், கூட்டுறவுச் சமாசத்தின் செயலாளர்எஸ் சுப்பிரமணியமும் மரக்கன்றுகளைநாட்டினர். (உ-77)

## தே. எண்ணெயின் இறக்குமதி தீர்வைகுறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யின் தீர்வை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம்நடைபெற்றபொருளாதார கொள்கை சம்பந்தமான அமைச்சரவைஉபகுழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேங்காய் மற்றும் காய்கறி எண்ணெய் விலைகளில் நியாயத்தன்மையினை ஏற்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என குழுவின் உபதலைவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# தென்பகுதிச் சிங்கள மக்களின் யாழ் வருகையை வெகுவாகப் பாதித்த கிழக்குப் படுகொலைகள்

# அரசைவிட சிங்கள மக்கள் தலைவர் பிரபா மீது நம்பிக்கை

**டொரிங்ரன்**

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் காலத்தின் நிர்ப்பந்தம் காரணமாக விரும்பியோ, விரும்பாமலோ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டன.

கைதப்பினால் கரணம் என்ற நிலையில் வீழ்ச்சிப் பாதையில் மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை எப்பாடுபட்டாவது கட்டி எழுப்ப வேண்டிய - தவிர்க்க முடியாத புறச் சூழ்நிலைக்கு புதிதாகப் பதவியேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் உந்தப் பட்டது. இச் சூழ்நிலைகளின் பிரசவிப்பே அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை.

இப் பிரசவத்தின் நன்மைகளை அதிகமாக எதிர்பார்ப்பதும் அதன் பலாபலன்களை அனுபவிக்க வேணவா கொண்டிருப்பதும் போரினால் மிகவும் சின்னாபின்னமாக்கப்பட்ட தமிழ் மக்களாகவே இருக்க முடியும்.

### தலைவர் மீது நம்பிக்கையைஏற்படுத்திய பத்திரிகையாளர் மாநாடு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் மாபெரும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை உலகத்தின் கண்க்ள் ரசிக்கும் வகையில் நடத்தினார்.

இப் பத்திரிகையாளர் மாநாடு சர்வதேச நாடுகள் மத்தியில் புலிகள் மீதான நல்லபிப்பிராயத்தை தோற்றுவித்ததோடு சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் அது அதிக தாக்கத்தை



ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை.இலங்கை அரசாங்கம் புலிகள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை விட சாதாரண சிங்கள மக்கள் தலைவர் பிரபா மீது அளவு கடந்த நம்பிக்கையை கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக சிங்கள மக்களின் ஆதரவோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன் அறுவடையாக யுத்தம் நின்றது. பாதை திறந்தது: புலித்தடை பறந்தது. பொருளாதாரத் தடை காற்றோடு போனது. மீள்குடியமர்வு, சிங்கள மக்களின் வடபகுதிக்கான குசலம் விசாரிக்கும் பயணங்கள்.... என சமாதான முயற்சியின் விளைவுகள் நீண்டு செல்கின்றன.

அடக்கு முறைகளிலிருந்தும், கட்டுக்களில் இருந்தும் தற்காலிக ஓய்வு கொடுத்துள்ள இந்த சமாதான முயற்சியின் பிரவாகங்கள் நீண்டு நிலைத்து நின்றால் மட்டுமே அதன் பலாபலன்களை அனுபவிக்க முடியும்.

### தென்னிலங்கை மக்களின் யாழ்ப்பாண வருகை

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு ஏ-9 கண்டிவீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கை மக்கள் குடாநாடு நோக்கிப் படை எடுத்தனர். ஆனால் தற்போது அவர்களின் வருகையில் ஒரு மந்தநிலை அல்லது தீடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குடாநாட்டுக்கு வருகை தந்த சிங்கள மக்கள் குடாநாட்டில் சென்று பார்க்காத இடமே இல்லை என்று கூறுமளவுக்கு ஒவ்வொரு பிரதேசங்களையும் படம்பிடித்து சென றனர்.

இவை ஒருபுறம் இருக்க வல்வெட்டித்துறையில் உள்ள தலைவர் பிரபாகரனின் பிறந்த வீட்டிற்குச் செல்லும் சிங்கள மக்கள் அவரது வீட்டைச் சுற்றிச்சுற்றி படம் பிடிக்கின்றனர். தலைவர் பிரபாவுடன் நின்று படம் படிப்பதான பிரமையில் இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெறுகிறது.

அத்துடன் பிரபாகரனின் வீட்டு மண்ணை புனித மண் என்று கருதும் அவர்கள் அதனை தென் பகுதிக்கு எடுத்துச் செல்கின்றனர். இந்த மாறுதல் அல்லது மனமாற்றம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படும் என்று கனவில் கூட எவரும் நினைத்துப் பார்க்கவில்லை.

அதுமட்டுமன்றி குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அவர்கள் தங்கி நின்று சுதந்திரமாக நடமாடினர். எனினும் தற்போது அவர்களின் வருகையில் ஓர் வீழ்ச்சி நிலை ஏறபட்டுள்ளது.

### கிழக்கில் வன்முறை யாழ்.வருகை குறைந்தது

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான வன் முறைகள் இதற்கு கட்டியம் கூறுவதாக உள்ளது.

அம்பாறை காஞ்சிரம்குடா அதிரடிப் படை முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களைப் படையினர் சுட்டுக்கொன்றனர். இதில் 8பேர் உயிரிழந்ததுடன் 15 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக மறு



நாள் திருகோணமலையில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிசாரும் ஊர்காவற்படையினரும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் மூன்று பொதுமக்கள் பலியானதுடன் 50இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். சமாதான முயற்சிகளைத் தவிடுபொடியாக்கக் கூடிய மேற்படி படுகொலைச் சம்பவங்களுக்கு பின்னணியில் யார் இருந்து செயற்பட்டார்கள் என்பது ஆய்வுக்குரிய விடயம்.

இப்படுகொலைச் சம்பவங்களின் பின்னர் கிழக்குமாகாணத்தில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் பதற்றமும் பகைமை உணர்வும் அதிகரித்து வருகிறது.

### கண்காணிப்புக்குழுவில் நம்பிக்கை இழப்பு

இவை ஒருபுறம் இருக்க படுகொலைச் சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு நடந்து கொண்ட விதமும் சம்பவம் குறித்து அது விடுத்த அறிக்கையும் தமிழ் மக்களை மன வேதனைக்குள்ளாக்கியது.

இந்த விடயம் அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் எதிரொலித்தது.

இக்கூட்டத்தில் அரச தரப்புப்பிரதிநிதியான மெல்வின் விஜேசேகரா அனல் பறக்கும் வாதங்களை பொழிந்து தள்ளினார். ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்களைக் கலைப்பதற்கு அதிரடிப்படையினர் இறப்பர் குண்டுகளைப் பாவித்ததற்கான தடயம் ஏதுமில்லை.

ஆனால் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் திருமதி ஆன்லுாயிஸ் படையினரின் கதையை மட்டும் கேட்டு விட்டு படையினர் முதலில் றப்பர் குண்டை பிரயோகித்தனர். நிலைமை கட்டுமீறிச்செல்ல நிஜக்குண்டை பிரயோகித்தனர் என தனக்கிணங்க அறிக்கை விட்டார்.

கண்காணிப்புக்குழுவின் ஏனைய பிரதிநிதிகளுடன் இது குறித்து எதுவும் கலநதுரையாடப்படவில்லை.

படையினர் வேண்டுமென்றே மக்களை கொன்று குவித்தனர். றப்பர் குண்டைப் பாவித்ததாக படையினர் கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கும் வேலை.

எனவே ஒரு பக்கச் சார்பான அறிகையை வாபஸ் பெறுங்கள் என்று ஆவேசமாக முழங்கித் தீர்த்தார்.


இதற்குப் பதிலளித்த மட்டக்களப்பு கண்காணிப்புக் குழுவின் தலைவர் கார்ல், இங்கு நடந்ததை கண்காணிப்புக்குழுத் தலைமையகத்தற்கு அறிவித்து அறிக்கையை மீள் பரிசீலனை செய்வோம் என்று கூறியதுடன் கூட்டம் முடிந்தது. இவ்வாறான சம்பவங்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மீதான நம்பகத் தன்மையைச் சிதைத்து விடக்கூடியது. நடுநிலை பேணவேண்டிய கண்காணிப்புக்குழு ஒரு தலைப் பட்சமாக நடந்து கொண்ட விதம் தமிழ் மக்களை வேதனை கொள்ளச் செய்துள்ளது.

இவ்வாறான சமயங்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உண்மையைக் வெளிக் கொணருவதுடன் சகல தரப்பினருடனும் கலந்தாலோசனை நடத்த வேண்டும். இல்லையேல் அது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பாரபட்



சமான முடிவுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

போராட்டம் தொடங்கிய காலம் தொட்டு இன்று வரையில் கிழக்கு மாகாணம் பெரும் அவலங்களைச் சந்தித்துக் கொண்டே வருகின்றது.



படுகொலைகள், சித்திரவதைகளுக்கு குறைவே இல்லாதா பூமியாக அது திகழ்கிறது.

குறிப்பாக தமிழ், சிங்கள, முஸலிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் ஒன்றாக வசிப்பது சமாதான முயற்சிகளைக் குழப்பியடிப்பதற்கு விரும்பும் சக்திகளுக்கு மிகவும் உறுதுணையாக அமையும். இதேவேளை கிழக்கு மாகாணச் சம்பவம் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் சந்தேகப் பார்வையைத் தோற்றுவிப்பதாகவே அமைகிறது. இந்நிலையில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான வளர்ந்து வரும் புரிந்துணர்வை சிதறடிக்கும். எனவே இந்தநிலைமைகள் மீளவும் இடம் பெறாவண்ணம் இருப்பதற்கு சகல தரப்புக்களும் முன் வருவதே காலத்தின் தேவையாகும்.


வலம்புரியின்

**கல்விச் சேவை**

அன்பார்ந்த அதிபர்களே!

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் பாடசாலைகளின் தோற்றம், அவற்றின் சமூகப்பிணைப்பு, நிறுவுனர் பற்றிய குறிப்பு, மாணவர்கள் படைத்த சாதனைகள், தற்போது பாடசாலையின் வளர்ச்சி, தேவைப்பாடுகள் என்பனவற்றை வெளிப்படுத்தி வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்தும் முயற்சியில் வலம்புரியின் கல்விக்குழு ஈடுபடவுள்ளது.

வாரத்தில் ஒருநாள்
வலம்புரியில் வலம் வரவிருக்கும்
**"எங்கள் கல்விச்சாலை"**
பகுதியில் உங்கள் பாடசாலையும்இடம்பெற வேண்டுமாயின் உங்கள் சம்மதக்கடிதத்தை
"எங்கள் கல்விச்சாலை"
வலம்புரி
இல.15 வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
வலம்புரியின் கல்விக்குழுவினர் தங்களின் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்வர்.

அன்புசால் அதிபர்களே!

உங்கள் பாடசாலைகளின் பழம் பெருமைகளை வெளிப்படுத்த வலம்புரி தரும் அரியவாய்ப்பைத் தவற விடாதீர்கள். ஆசிரியர்

# இன்று ஒரு தகவல்

## குலோத்துங்கன் அரசியலும் குணாதிசயங்களும்

பல நாடுகளைத் தன்வசமாக்கி வெற்றி கண்ட குலோத்துங்கன் என்ற சோழ மன்னன், நாட்டை ஒழுங்கு பெறச் செய்யஆரம்பித்தான், தன் ஆட்சிக்குட்பட்ட நாட்டிற்கு எல்லைவகுத்து, பகைவர் எதிர்க்காதவாறு ஆங்காங்கே தன் படைகளை வைத்தான், நாடு மண்டலங்களாகவும், சிறு நாடுகளாகவும், கோட்டங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப் பெற்று, ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே ஒருசபை ஏற்படுத்தப்பட்டிருந்தது; அந்த அந்தப் பிரிவின் ஆட்சி, அச்சபையினராலேயே நடைபெற்றது. அரசன் நாட்டில் இன்றியமையாத பல சிவாலயங்களையும், விஷ்ணுவாலயங்களையும் கட்டுவித்தான்; அவன் சிறந்த சிவபக்தனாதலால், சிதம்பரத்தின் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தான். அதனால் அவன்பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன் எனப் பெயர் பெற்றான், ஆலயங்களுக்கு வேண்டிய நிலங்களை மானியமாக விட்டான். கோயில்களில் காலந்தவறாது, பூசை, விழா முதலியன குறைவின்றி நடக்குமாறு ஏற்பாடு செய்தான். கோயில்கள் சம்பந்தமான வேலைகளையும், வருவாயையும் கவனிப்பதற்கு ஒரு சபையினரை நியமித்தான்;

அவனது அரசியலில் பண்டைக்கால முறைப்படி அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் என்ற ஐம்பெருஞ் சபையினர் தலைமை பெற்றிருந்தனர்; அவர்களுக்கு ஐம்பெருங் குழுவினர் என்று பெயர்; அவர்களேயல்லாமல், ஒவ்வொரு தொழிலையும் கவனிக்கப்பல உத்தியோகத்தர்களும் சோழன் அரசியலில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தேசத்தின் ஆட்சியை நடத்துபவர், தேசத்தின் வருவாயைக் கவனிப்பவர், நாட்டின் நடவடிக்கைகளைக் கவனிப்பவர், நாட்டில் நடைபெறும் நன்மை தீமைகளைக் கவனிப்பவர், குற்றங்குறைகளைத் தீர்ப்பவர், படைகளைப் பாதுகாத்துத் தலைமை ஸ்தானத்தை வகிப்பவர், அரண்மனை வரவு செலவுகளைக் கவனிப்பவராகப் பல உத்தியோகஸ்தர்கள் அக்காலத்தில் இருந்தார்கள்.

நாட்டுப்புறக் கிராமங்களில் பல உத்தியோகஸ்தர் இருந்தனர். நாட்டில் சண்டை, சச்சரவு நேராதபடிபாதுகாத்துக் கொள்பவர் சிலர். ஓர் ஊரில் நடக்கும் செய்தியை உடனுக்குடனே அரசாங்கத்தாருக்கு அறிவிக்கத்தக்க உத்தியோகத்தர்கள் ஒவ்வோர் ஊரிலும் இருந்தார்கள். குடிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைக்க வேறொரு கூட்டத்தார் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆற்று நீரை அணைகட்டிப் பல கால்வாய்கள் மூலம் வயல்களுக்குப் பாயுமாறு செய்யப் பல உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். சுருங்கக்கூறின், இக்காலத்தில் நாம் அரசாங்கத்திடமிருந்து பெறுகின்ற நன்மைகளில் பெரும்பாலானவற்றை அக்காலக் குடிகள் சோழ மன்னன் குலோத்துங்கனிடமிருந்து பெற்றார்கள் என்று சொல்லலாம்;

மனிதர்களுக்கும் விலங்குகளிற்கும் தரும வைத்திய சாலைகள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டிருந்தன; மலையில் உண்டாகும் சிறந்த மூலிகைகளும், கொடிகளும் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுத் தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்பட்டன; வழிப்போக்கர் வெயிலால் வாட்டமுறாவண்ணம் சாலைகளின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன. சாலைகள் அடிக்கடி செப்பம் செய்யப்பட்டன. 10 மைல்களுக்கு ஒவ்வோர்அறச்சாலை கட்டப்பட்டிருந்தது. அதில் வழிப்போக்கர்களுக்கும், ஏழைகட்கும், பரதேசிகட்கும் உண்டி வழங்கப்பட்டடது; சாலையோரங்களில் ஆங்காங்கே இளமரச் சோலைகளும், நன்னீர்க் கிணறுகளும் உண்டாக்கப்பட்டன; ஆற்றுப் பாய்ச்சல் அற்ற இடங்களில் பல ஏரிகளும் குளங்களும் ஏற்படுத்தப்பட்டன.

குலோத்துங்கன் திக்குவிஜயம் செய்து, பகை அரசர் யாவரையும் ஒடுக்கி வெற்றி மாலை சூடி, திரிபுவன சக்கரவர்த்தி என்னும் பட்டம் புனைந்து, விஜயாபிஷேகம் செய்து கொண்டான். சோழ மன்னன் இரவிலும், பகலிலும் கனவிலும் குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே நாட்டம் உடையவனாயிருந்தான். ''குடிகளுக்கு இன்னும் என்ன செய்தால் நலமாயிருக்கும்'' என்னும் யோசனையே எப்போதும் அவனுக்கு உண்டாவது. அவன் புலவர், பாணர், இரவலர் என்னும் இவர்களைப் பெரிதும் ஆதரித்தான். அவன் யார் எதைவிரும்பி வரினும், 'பெறுக' என்று மனந்தளராது கொடுக்கும் வள்ளல். அவனுடையநற்குண நற்செயல்களால் சோழநாட்டுக் குடிகள் அவனையே கண்கண்ட தெய்வமாகப் போற்றி வந்தார்கள். ''எம்அரசன் நீடுவாழ்க'' என்பதே அவர்கள் உச்சரித்த மந்திரம். இம்மாபெருவேந்தன் நாற்பத்தொன்பது ஆண்டுகள் (கி.பி. 1070-1119) தன் வீரப்பிரதாபம்விளங்கஅரசாண்டான். இவனுக்குப் பின்னர் இவன் மைந்தன் விக்கிரம சோழன் பட்டமடைந்தான். அன்பும், அடக்கமும், புலமையும் நல்லறிவும், தெய்வபக்தியும், கொண்ட சோழன்குலோத்துங்கனைத் தமிழ் உலகம்என்றும் மறவாது.

வித்துவான்

மா.இராசமாணிக்கம்

## யாழ். மாநகரசபை கூட்டத்தில் ஓட்டோ சங்கம் கலந்துகொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பது தொடர்பாக யாழ். மாநகராட்சி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் தமது சங்கப் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லைஎன்று வட பிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச்சங்கம் தெரிவித்துள்ளது;

இதுதொடர்பில் வெளியான செய்தியை மறுத்துள்ள அச்சங்கம், மேற்படி கூட்டம்தொடர்பாக தமக்கு அறிவிக்கப்பட்ட தினத்திற்கு ஒருநாள் முன்னதாக கூட்டம் இடம்பெற்ற காரணத்தினாலேயே தம்மால் கலந்து கொள்ள முடியாமல் போனதாகவும் தெரிவித்துள்ளது;

(உ)

# விட்டுக்கொடுப்புகள் எதனையும் ஜனாதிபதியுடன் செய்வதில்லை

## ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு கோரும் பிரேரணையை நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், உயர் நீதிமன்ற சிபார்சின் அடிப்படையில் ஜனாதிபதியுடன் விட்டுக்கொடுப்புகள் எதனையும் செய்வதில்லை என முடிவுசெய்துள்ளது. 19வது அரசியலமைப்பு மாற்றத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என உயர்நீதிமன்று தெரிவித்ததையடுத்து

பாராளுமன்றத்தைக்கலைக்கும் அதிகாரத்தை மூன்று வருடங்களுக்கு கட்டுப்படுத்துவது என்றும் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதும் எனவும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மலிக்சமரவிக்கிரம, உயர் நீதி மன்றத்தின் இந்தப் பரிந்துரையை நிராகரித்துள்ளார்;

ஜனாதிபதியைத் தான் சந்தித்த வேளையிலும் அவர் இந்தப் பரிந்துரையை முன்வைத்ததாகவும் எனினும் தான் இதனை நிராகரித்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் இந்தப் பரிந்துரையை 2004ம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சியை எந்நேரமும் கலைக்கும் வாய்ப்பை ஜனாதிபதிக்கு அளித்திருக்கின்றதுஎனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தைக்கலைப்பதற்கு ஜனாதிபதி இணங்காவிடில் ஜனாதிபதிக்கான நிதியை நிறுத்துவதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்க முடியாது என அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சைநழுவிப் போகின்ற சைவ பண்பாட்டு விழுமியங்கள் எனும் தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை பிற்கல்5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

(இ)

## இராசி பலன்

(24/10/2002)

(ஐப்பசி 7, வியாழன்)

திருதியை மா.6 23 வரை

கார்த்திகை பி. ப. 1.06வரை

இராகுகாலம் - 1.32 – 3 02

நல்ல நேரம் - 7.32 -9.02

### மேடம்

தனநாசம், விவாதம், மெலிந்த மனம், காரிய தாமதம்;

### இடபம்

பாக்கியம், தேகநலன், சத்துரு ஜெயம், சயன சுகம்,

### மிதுனம்

உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், வாக்குப் பலிதம், பொருள் விரயம்.

### கடகம்

இஷ்ட சித்தி, புகழ் கிடைத்தல், குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம்;

### சிங்கம்

தொழில் நன்மை, நிலை மாற்றம், அதிகாரம், சகோதரர் உதவி,

### கன்னி

ரோகபயம், வேலைக் கஷ்டம், பிரயாணம், காரிய தாமதம்;

### துலாம்

பிரயாண பயம், எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சி தடங்கல், உடல் நலக்குறைவு.

### விருச்சிகம்

சௌக்கிய விரக்தி, பிரயாண சுகம், உறவினர் வருகை, நல்ல செய்தி,

### தனுசு

மனமகிழ்ச்சி, அதிக பிரயாசை, முயற்சி கைகூடும், உடல் நலம்;

### மகரம்

காரிய தாமதம், புத்திரரால் கவலை, ரோகம், செய்தொழில் விருத்தி;

### கும்பம்

பித்த ரோகம், தாய்வழி உறவினர் சந்திப்பு, ஆரோக்கியக் குறைவு.

### மீனம்

சகோதரர் உதவி, காரிய ஜெயம், சுவாரஸ்யம், நல்ல முயற்சி.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## வகை தொகையின்றி பனை மரங்கள் தறிப்பு

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காட்டுப்பகுதியில் கடற்படையினரால் வகை தொகையின்றி பனைமரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் இவை தொடர்பாக உரிய கடற்படை அதிகாரிகளுக்கு முறையிட்ட போதும் பனை தறிப்பு சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது;

யாழ் குடாநாட்டில் படையினர் பனைஅபிவிருத்திச் சபை வனவளப்பிரிவு அரச அதிகாரிகள் உட்பட பல மட்டங்களில் பனை விதைமீள் நடுகை இடம்பெறும் இவ்வேளையில் இவ்வாறான பனை தறிப்புசம்பவம் பெரும் வேதனையளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-246)

கடமையைச் செய்யத் தவறும்

## பொலிஸ் அதிகாரிகளை காட்டிக்கொடுக்க வேண்டும்

### சபாநாயகர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாத பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்துமாறு சபாநாயகர் பாராளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டிசில்வா நேற்றுமுன்தினம் உள்துறை அமைச்சரிடம் எழுப்பிய நேரடிக்கேள்வியின் போது ஆற்றிய விசேட உரையிலேயே சபாநாயகர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இச்சம்வங்களுடன் தொடர்புடைய நபர்கள் சுதந்திரமாக நடமாடுவதாகவும் சபாநாயகர் இச்சமயத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

## தெற்கில் இருந்துவரும் மரங்களுக்கு வரிவிலக்கு

### பொருண்மியப் பொறுப்பாளர் அருள் தகவல்

(வட்டுக்கோட்டை)

தென்பகுதியில் இருந்து யாழ். குடநாட்டுக்கு தேவைகளின்பொருட்டு எடுத்துவரப்படும் மரங்களுக்கு வரி வசூலிக்கப்படமாட்டாது.

பனை அபிவிருத்திச்சபையின் ஊர்காவற்றுறை மாதிரிப் பனம்தோட்டத்தில் 30 ஆயிரம் பனைவிதை நடுகைத் திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் அருள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்குதொடர்ந்தும் உரையாற்றுகையில்;

யாழ். மாவட்டத்தில் மரங்களைத்தறிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் தமக்குத் தேவையானமரங்களை தென்பகுதியில்இருந்து தாராளமாகக் கொண்டுவரலாம்.

இதற்கு விடுதலைப்புலிகளின் நிதிப்பிரிவு வரிவிலக்கு அளித்துள்ளதுஎன்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் ரதன், ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் ஜே எக்ஸ் செல்வநாயகம், இப்பகுதிக் கிராமஅலுவலர்கள், தீவக நலன்காக்கும் அமைப்பு அங்கத்தவர்கள் பனை அபிவிருத்திச்சபைப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(உ-216)

## இடிதாங்கி அமைக்கக் கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

காக்கைதீவுக் கடற்கரையில் இடி தாங்கியை அமைக்குமாறு இப்பகுதியில் தொழிலை மேற்கொள்ளும் சுமார் ஆயிரம் மீனவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு இடிமின்னல் தாக்கியதில் இப்பகுதியில் இளைஞர் ஒருவர் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-201)

# சமாதானப் பயணம் ஆரோக்கியமாக நகர

# பிரதமர்-ஜனாதிபதி முறுகல் சாதகமாக அமையாது

(கொழும்பு)

**18, 19 வது சட்டத்திருத்த மூலம் மீதான இலங்கையின் உச்ச நீதி மன்றின் தீர்ப்பின் முக்கியத்துவம் பற்றி கொழும்பு வீரகேசரி பத்திரிகையாளர் தேவராஜ் பி. பி. சி. தமிழ்ச்சேவைக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு**

கேள்வி: இலங்கையின் உச்ச நீதிமன்றின் இத் தீர்ப்பின் முக்கியத்துவம் என்ன?

பதில்: உண்மையில் இவ் உச்ச நீதிமன்றின் தீர்ப்பு அரசியல் அமைப்பை நினைத்த மாதிரி எவரும் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையை அரசிற்கு உணர்த்தியுள்ளது.

கேள்வி: இந்த தீர்ப்பினால் அரசியல் சட்ட நெருக்கடி வர வாய்ப்பு இருக்கிறதா?

பதில்: இத் தீர்ப்பின் படி நிறைய அரசியல்சட்ட நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அதாவது, பிரதமர் தலைமையிலான அரசு பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு பிரேரணை கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அதனை ஜனாதிபதிக்கு அனுப்பினால் ஜனாதிபதி கலைக்க வேண்டும் என்ற கட்டாயம் அரசியல் அமைப்பில் இல்லை.

அது மட்டுமன்றி, பல சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உருவாக்கு நிலையும்உள்ளது.

கேள்வி: அப்படியானால் தற்போதைய அரசிற்கு இது ஒரு பின்னடைவு என்று கருதப்படுகிறதா?

பதில்: இது அரசிற்கு பெரும் பின்னடைவு தான். அரசின் சட்ட வல்லுநர்கள் எந்த அளவிற்கு இவ்வாறான ஆலோசனைகளை வழங்கினார்கள் என்பது தெரியவில்லை ஏன்என்றால், இது உண்மையில் பெரும் பின்னடைவாகவே உள்ளது.

> அரசியல் அமைப்பை எவரும் நினைத்த மாதிரி மாற்றம் செய்துவிட முடியாது என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அரசிற்கு உணர்த்தியுள்ளது.

கேள்வி:- இதனால்அமைதி வழிமுறைக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா?

பதில்:- நிறையவே இருக்கின்றது. பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்கும்-ஜனாதிபதிக்கும் இடையில் உள்ள முறுகல் நிலை ஆரோக்கியமான சமாதான பயணத்தை கொண்டு செல்வதற்கு சாதகமாக அமையாது.

ஆனால், சர்வதேச சமூகம் அல்லது அமெரிக்கா இதை எந்த அளவிற்கு அனுமதிக்கும் என்று தான் தெரியவில்லை. ஏனென்றால், சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகத்தான் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கின்றனர். எனவே, அவர்கள் இதனை அனுமதிப்பார்களா அல்லது இரு பகுதியினரிற்கும் ஏதோ ஒரு வகையில் அழுத்தம் கொடுத்தும் மீண்டும் ஒருவகையில் சமாதானத்தை தொடருவதற்கு காரணகர்த்தாவாக அமைவார்களா என்பதற்கெல்லாம் காலம்தான் பதில் கூறவேண்டும்.

கேள்வி: இதனிடையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரசின் உறுப்பினர்கள் சிலரின் நாடாளுமன்ற புறக்கணிப்பிற்கும் அவர்களுடன் அரசு தனித்தனி பேச்சு நடத்துவதற்கும் ஒரு அரசியல் முக்கியத்துவம் அல்லாது அரசியல் திருப்பம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா?

பதில்: இந்த விடயம் கூட அரசிற்கு பின்னடைவு என்றுதான்கூறவேண்டும்18,19வது அரசியல் சீர்திருத்தத்தினை பாராளுமன்றிற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கும் வேளையில் இதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியில்உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. தற்போதைய இக்குழப்பநிலை பொதுசன ஐக்கிய முன்னணி எம்.பிக்களைக்கூட பின் வாங்க வைத்துள்ளது எனவே இதுகூட அரசிற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் சூழ் நிலையை உருவாக்கியுள்ளது. (உ-10)

## மீன்பிடிக்க அனுமதி மறுப்பு ம.உரிமை ஆணைக்குழுவில் மீனவர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டிருப்பது தொடர்பாக மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்த ஜோசப் பெஞ்சமின் என்பவரே மேற்படி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொழிலுக்குச் சென்றவேளை குருநகர் இராணுவ முகாமை அண்டிய பகுதியில் வைத்து படையினர் தனது மீனவர் அடையாள அட்டையைப் பறித்து கிழித்து எறிந்தும் உபகரணங்களைப் பறித்தெறிந்தும் தன்னை இம்சைப்படுத்தியதாகவும்,

தொழிலுக்குச் செல்ல விடாது தடுத்ததாகவும் பாதிக்கப்பட்டவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் மனித உரிமைகளை மீறுவதாகஅமைந்துள்ளதுஎன சுட்டிக்காட்டிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ருவான் சந்திரசேகர, இம் மாதம் இறுதிப்பகுதியில் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (உ-6)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவன 2003 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-6)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய சேவைக்கால ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டுப் புள்ளிச் செலமர்வு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9:00 மணிக்கு யாழ். வலயக் கல்விப்பணிமனையில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயத்தில் உள்ள சகல சேவைக்கால ஆசிரியர்களையும் இந்த கணிப்பீட்டுப் புள்ளிச் செயலமர்வில் கலந்து கொண்டு பயனடையும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-6)

## சைவநெறித் தேர்வு சனியன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சைவநெறித் தேர்வு எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு, சிலாபம் ஆகிய இடங்களில் உள்ள 402 தேர்வு நிலையங்களில் 72 ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (உ)

## பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினர் வாபஸ் ஆக வேண்டும்

### தமிழ்க் கூட்டமைப்பு தீர்மானம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு பாதுகாப்பு வலயங்களில் உள்ள படையினரை உடனடியாக வாபஸ்பெறச் செய்து, அங்கு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றம் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று எடுத்துள்ளனர்.

தமிழ்க்கூட்டமைப்பு எம்பிக்களின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. அப்போது தான் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றும், அதில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் இன்னமும் அமுல்செய்யப்படவில்லை என்று பிரதமரைச் சந்தித்துச் சுட்டிக்காட்டுவதெனவும்,

வலிகாமம் வடக்கு, தென்மராட்சிப் பகுதி பாதுகாப்பு வலயங்கள் அப்புறப்படுத்த வேண்டுமென்றும் பிரதமரை வற்புறுத்துவதென்றும் அங்கு மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## 3 ஆயிரம் கோடி ரூபாவை பொ.ஐ.மு அரச வங்கிகளில் கடனாகப் பெற்றது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நடடை ஆட்சி செய்த காலத்தில் இரு அரச வங்கிகளில் இருந்து3 ஆயிரம் கோடி ரூபாவை கடனாக பெற்றுள்ளதாக நிதியமைச்சர் கே என்.சொக்ஸி நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

நிதித் திருத்தச் சட்டமூலம் மற்றும் ஒதுக்கீட்டுசட்டமூலம் ஆகியவற்றை பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான காப்புறுதி மற்றும் கப்பல் கட்டணம் ஆகியவற்றின் அடிப்படையில் வரியை அறவிடுவதே இந்நிதித்திருத்த சட்டமூலத்தின் நோக்கமாகும்.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கையால்,மக்கள் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக பொதுஜனஐக்கிய முன்னணியின்பாராளுமன்றஉறுப்பினர் நிமால் சிறிபால டிசில் வா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

**சட்ட பீடம் அமைக்கும் வகையில்**

## தரவுகளைச் சேகரிக்க 5பேர்கொண்டகுழுஅமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் அமைப்பதற்கு முன்னோடி நடவடிக்கையாக 5 பேர் கொண்ட குழுஒன்றை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அமைத்துள்ளது.

உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் க. சிற்றம்பலம் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவில்கலைப் பீடாதிபதி பேராசிரியர்பொ.கோபாலகிருஷ்ண ஐயர், முகாமைத்துவ கற்கைகள்வணிக பீடாதிபதி பேராசிரியர்த.நடராஜசுந்தரம்,வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சத்தியசீலன், அரசியல் துறைபதில்தலைவர் கலாநிதி மணிவாசகன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு சட்டபீடம் அமைப்பது தொடர்பாக அதனோடு இணைந்த வளம், ஆளணி பாடவிதான செயற்பாடுகள் போன்றதரவுகளைச் சேகரிக்கவுள்ளது. (ந-5)

## சமாதானப் பேச்சுத் தொடர்பாக கருத்துக் கணிப்பு இடம்பெறும்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

அரசும்- விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான கருத்துக்கணிப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் இக்கருத்துக் கணிப்பு இம்மாதம் 26 ம் திகதி இடம்பெறும் என அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, காலி, அனுராதபுரம், மொனறாகலை, மட்டக்களப்பு, வவுனியா, நுவரெலியா,குருநாகல் ஆகிய பத்து மாவட்டங்களில் இக்கருத்துக்கணிப்பை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பத்து மாவட்டங்களிலும் சுமார் 5 ஆயிரம் பேர் இக்கருத்துக்கணிப்பில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நூறு பல்கலைக்கழக மாணவர்கள் இப்பணியை மேற்கொள்ளுவார்கள் என்றும் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

# ஈராக்கிற்கெதிரான பிரேரணையை 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நாடுகளிடம் அமெ. கையளிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கிற்கெதிரான புதிய பிரேரணையை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் சபையில் அங்கம் வகிக்கும் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளிடம் அமெரிக்கா நேற்று முன்தினம், கையளித்துள் ளது.

எதிர்காலத்தில் ஈராக்கிற்கெதிராக எந்த வகையிலான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் வகையில், இப் புதிய பிரேரணை அமைந்துள்ளது.

எனினும் இது பற்றி எந்த விதமான முடிவுகளும் ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இப்பிரேரணையில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிகதும் நிரந்தர நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ பிரிட்டன், ரஷ்யா, சீனா, ஆகிய வற்றிற்கிடையில் ஓர் இணக்கப்பாடு காணக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, கடந்த ஒரு வார காலமாக பிரேரணை தொடர்பாக இருந்த இழுபறிநிலை முடிவிற்கு வரும் எனவும் கருதப்படுகின்றது.

(சு-04)

# புதிய பிரேரணைக்கு ரஷ்யா அதிருப்தி

(மொஸ்கோ)

ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர அங்கம் வகிக்கும் நாடுகளிடம் அமெரிக்கா கையளித்த ஈராக்கிற்கெதிரான புதிய நகல் பிரேரணைக்கு ரஷ்யாஅதிருப்தி தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா பிரிட்டன் முனனர் சமர்ப்பித்திருந்த பிரேரணையை ரஷ்யா ஏற்றுக் கொள்ளவில்லை எனவும், தற்போதைய பிரேரணையில் முன்னையதை விட சிறிய மாற்றமே காணப்படுகின்றது எனவும் ரஷ்ய அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவால் கையளிக்கப்பட்டுள்ள ஈராக்கிற் கெதிரான புதிய பிரேரணைக்கருத்துக்கள் இன்னும் வெளியிடப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் ஆயுதக் குறைப்புத் தொடர்பாக ஈராக்குடன் பேச்சு நடத்தி சமாதானத்தின் மூலமே தீர்வு காணலாம் என ஈராக் தொடர்பான பேச்சு வார்த்தைக்கு மொஸ்கோ சென றுள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆயுதக் கண்காணிப்புக்குழுவினா தெரிவித்துள்ளனர்.

(சு-4)

# ஜம்மு-காஷமீரில் அரசமைக்கும் முடிவை காங்கிரஸ் கட்சி நிராகரிப்பு

(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மு'து முகம்மது ஜெய்த்துடன் சேர்ந்து அரசமைக்கும் முடிவை காங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது.

இது பற்றி கட்சித்தலைவி சோனியாகாந்தி முறையாக அறிவிக்கவுள்ளார் என கட்சியின் சிரேஷ்ட தலைவரான மன்மோகன் சிங் நேற்று முன்தினம் மாலை தெரிவித்துள்ளார்.

ஜம்மு- காஷ்மீர் மாநில்த்தில் அரசாங்கத்தை அமைப்பது தொடர் பான இந்த முடிவை சோனியா காந்தி எப்போது அறிவிப்பாரென அவர் உறுதியாகக் கூறவில்லை.

மாநில சட்ட சபையில் 20 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி மேலும் 20 பேர் தமக்கு ஆதரவு வழங்குவதாக கூறுகின்றது.

அரசாங்கத்திற்கு தாமே தலைமைதாங்க வேண்டுமென்று அக்கடசி கூறிவருகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே வேறு எந்த விடயம் பற்றியும் பேசுவதற்கு அக்கட்சி மறுத்து வருகின்றது.

87 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபையில் சாதாரண பெரும்பான்மையினைப் பெறுவதற்கு 44 உறுப்பினர்களின் ஆதரவு தேவை ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு இந் நிலையை அடைய என்னும் 4 பேரின் ஆதரவு தேவையாகும்.

அதே சமயம் மக்கள் ஜனநாயகக் கட்சியில் மொத்தம் 18 உறுப்பினர்களில் குறைந்தது அரைவாசிப்பேர் காங்கிரஸிற்கு ஆதரவு வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(சு-4)

## ஐ.நா. சபையின் தூதுவர் யாங்கோங் சென்றுள்ளார்

(மியன்மார்)

மியன்மார் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் நேற்று முன்தினம் யாங்கோங் சென்று பேச்சு நடத்தியுள்ளார்.

ஜனநாயகத்தலைவர் ஆங்சாங் சூட்சியைச் சந்தித்து பேசிய அவர் மியன்மாரின் ஆளும் இராணுவ அரசிற்கும்,ஜனநாயகத் தலைவர் ஆங்சாங்சூட்சிக்கும் இடையே பேச்சு நடை பெறச்செய்யவும், அரசியல் மாறறத்தை விரைவு படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

(சு-4)

## கனடா எழுத்தாளருக்கு விருது

(பிரிட்டிஷ்)

பிரிட்டனில் மிகவும் புகழ்பெற்ற விருதான "புக்கர்" விருதினை கனடா நாட்டின் எழுத்தாளர் ஜோன்மாட்டின், "லைப்பொப்ரி" என்ற தனது நாவலுக்காகப் பெற்றுள்ளார். (சு)

## சீன அதிபர் அமெரிக்கா பயணம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் புஷ்சுடன் பேச்சு நடத்த சீனாவின் அதிபர் ஜியோங்ஜெனின் பீஜிங்கிலிருந்து அமெரிக்கா சென்றுள்ளார்.

செக்ஸசில் நாளை வெள்ளிக்கிழமை அமெரிக்க அதிபரை சீன அதிபர் சந்திக்கவுள்ளார்.

கடந்த ஒருவருடத்தில் மூன்றாவது தடவையாக இவர்கள் சந்திக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-04)

# அமெரிக்க- இந்திய விமானப்படை யுத்தப் பயிற்சி ஒத்திகை

(வாஷிங்டன்)

அமெரிக்காவும்,இந்தியாவும் 40 வருட காலத்தின் பின் முதலாவது முறையாக ஒருங்கிணைந்து விமானப்படை யுத்தப் பயிற்சி ஒத்திகை ஒன்றை நேற்று நடத்தியுள்ளன.

ஆக்ரா நகரில் நடந்த இந்த ஒத்திகையில் இந்தியா- அமெரிக்க விமானப்படையினரின் போர் விமானங்கள் இடம் பெற்றன.

பரா இராணுவத்துருப்பினரையும் உபகரணங்களையும் விண்ணில் இருந்து இறக்கும் நடவடிக்கை தொடர்பாகவே இவ் ஒத்திகை நடத் தப்பட்டுள்ளது.

(சு)

# யுத்த விமானத்தைத் தயாரிக்கும் திட்டத்தில் அமெரிக்காவும்அவுஸ்திரேலியாவும் இணைவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் மிகப் பெரிய யுத்த விமானத்தை தயாரிக்கும் திட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன.

அடுத்து வரும் 10 ஆண்டுகளில 15 கோடி டொலரை அவுஸ்திரே லியா இதற்காக செலவிடவுள்ளது.

இதன் காரணமாக அடுத்த 30 ஆண்டுகளின்போது உலகில் மிகவும் நவீனமான யுத்த விமானங்களை உருவாக்குவதில் அவுஸ்திரேலியா முன்னணியில் திகழும் என தெரியவந்துள்ளது.

அடுத்த வாரம் அமெரிக்காவில் இது சம்பந்தமான உடன்படிக்கையில் இரண்டு நாடுகளும் கைச்சாத்திடவுள்ளன.

ராடர் கருவியின் கண்களுக்கு படாமல் செல்லக் கூடிய சுப்பர் சொனிக் சண்டை விமானமே அடுத்த அரை நூற்றாண்டின் போது அதிகமாகப் பயன்படுத்தப்படும் யுத்த விமானமாக இருக்கும்.

அமெரிக்காவின் பாதுகாப்பு நிறுவனம் இது போன்ற 5 ஆயிரம் விமா னங்களைத் தயாரித்து விற்பனை செய்யவிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-4)

# மர்மத் துப்பாக்கி நபரால் பஸ்சாரதி ஒருவர் பலி

## அமெரிக்காவின் தொடர் கொலைகள் குறித்த திடுக்கிடும் தகவல்

(வாஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் அருகே நேற்று முன்தினம் துப்பாக்கி நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்துல் பாடசாலை மாணவர்களின் பஸ் சாரதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

சாரதி பஸ்சினுள் ஏறும்போதே மறைந்திருந்த இந்த நபர் தாக்குதலை நடத்தியுள்ளார்.

ஏற்கனவே 9பேரை பலிகொண்ட இடத்திலேயே இச்சம் பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும் அமெரிக்காவை அச்சமடையச் செயயும் இத்துப்பாக்கி நபர் மர்மமான முறையில் தாக் குதல் நடத்துதியவுடன் மறைகின் றார் எனவும், தாக்குதல் மேற்கொண்டவுடன் அமெரிக்க பொலிசார் வீதித் தடைகளை போட்டு போக்குவரத்தினை தடைசெய்தும் மேற்படி நபரை கைது செய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்துப்பாக்கிதாரி அமெரிக்காவில் மேற்கொண்ட தாக்குதலில் 10பேர் கொல்லப்பட்டதுடன் 4பேர் காயம் அடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-4)

## சந்தேக நபர்களின் உருவப் படங்கள் தயாரிப்பு

(ஜகார்த்தா)

இந்தேனோசியாவின் பாலித்தீவில் கடந்த 12ந்திகதி இடம்பெற்ற பயங்கரவாதக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் சந்தேக நபர்களாக கருதப்படும் மூவரின் உருவப்படங்களை தயாரித்துள்ளதாக சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் சர்வதேச குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேக நபர்கள் மூவரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது.

(சு)


அன்பு வாசகர்களே!

வலம்புரியின் வாரமலர்

சங்கு நாதம்

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரி இணைக்கப்படாமல்
தனித்து ரூ.12/= விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்

தினசரி வெளிவரும் வலம்புரியின் விலையில் மாற்றமில்லை

அறிஞர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்துவிட்ட சங்குநாதத்தை நீங்களும் வாசிக்கத் தவறாதீர்கள். இலங்கை பூராகவும் விற்கப்படும் சங்குநாதம் இனிமேல் உங்கள் உறவுகளுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றது.

சங்குநாதம்
வலம்புரியின் இணைப்பின்றி
ரூ. 12/= மட்டுமே.

## சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்சிறந்த விவசாயிகளாகத்தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் 26ஆம் திகதி சனி கிழமை காலை 9 30 பணிக்கு யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தலைமையில் இடம்பெற வுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர்செ.பத்மநாதனும்,சிறப்பு விருந்தினர்களாக யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன்கால்நடைஅபிவிருத்தித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் பொ. இராமநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

# கிளிநொச்சி மாவட்டத்தில் முதியோர் இல்லம்

# முன்னின்று உழைத்தவர் அமரர் மு. கந்தசாமி

## மறைந்தார் மாண்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளம் - ஐயனார் புரத்தில் முதியோர் இல்லத்தை உருவாக்கி -சிறப்பாக செயல் படுத்திவந்த அமரர் மு. கந்தசாமி அமரராகி 18.10 2002 இல் ஓராண்டு பூர்த்தி அடைகிறது.

1926 ஆம் ஆண்டு இணுவிலில் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த இவர், தனது கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பெற்று - பொது சுகாதாரப் பரிசோதகராக சுளுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறினார்.

அளவெட்டி கிராமத்தில் திருமணம் செய்து ஆஸ்திக் கொன்றும், ஆசைக் கொன்றும் என இரு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்.

### மலேரியாத் தடை இயக்க அதிகாரி

தனது சேவையினை சிங்களக்கிராமத்தில் ஆரம்பித்து - யாழ். மாவட்டத்திலும், பின்பு கிளிநொச்சி மாவட்டத்திலும் சிறப்பாக செயல்படுத்தியமை காரணமாக மலேரியா தடை இயக்கப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா தடைஇயக்கப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியகாலத்தில் அப்பதவியோடு பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். அகவை எழுபது ஆகியும் வயோதிபம் என்ற சொல்லுக்கு இடம்கொடுக்காது தனது கடமையினை- தனது வயதொத்த பழைய துவிச்சக்கரவண்டிகளைப் பாவித்துத் திறம்பட செயல்பட்டதை யாரும் மறந்துவிடமாட்டார்கள்.

### தாய்சேய் சிகிச்சை நிலையங்கள்

இடம்பெயர்வு காரணமாக சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை அக்கராயன் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அங்கிருந்து தனது கடமைக்காக தருமபுரம், பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் குமாரசாமிபுரம் போன்ற தொலைவிலுள்ள கிராமங்களுக்கு துவிச்சக்கர வண்டியில் வந்து சேவையாற்றினார்.

தருமபுரம் வைத்தியசாலையில் இடம்பெற்றுவந்த தாய்சேய் சிகிச்சை நிலையத்திற்கு வெகு தொலைவிலிருந்து வரும் மக்கள் நலன்கருதி அப்பகுதிமக்கள் இலகுவாக சேவையைப்பெற இரண்டு புதிய தாய்சேய் சிகிச்சை நிலையங்களை உருவாக்கினார்: ஒன்று பிரமந்தனாறு பகுதியிலும், மற்றது புளியம்பொக்கனைச் சந்தியிலும் அமைந்தன:

### முதியோர் இல்லம்

யுத்தத்தினாலும் இடப்பெயர்வினாலும் அல்லலுற்ற மக்களின் நிலையற்ற வாழ்க்கைப் பயணத்தில் முதியோர்களை சுமையாகக் கருதுகின்ற நிலைப்பாடு உருவானது. கைவிடப்பட்ட முதியவர்கள் தங்க இடமின்றி மரநிழல்கள், ஆலயங்கள்,வைத்திய சாலை என தஞ்சம் புகுந்ததைக் கண்ணுற்ற கந்தசாமி கிளிநொச்சி மாவட்டத்தில் அன்றைய அரசாங்க அதிபர் தில்லை நடராசாவின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து 11.5.1997 ந்திகதி கூட்டத்தின் தீர்மனத்தின் பிரகாரம் 7.7.1997 ந்திகதி கீற்றுக்கொட்டகையில் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஐவரைக் கொண்டு முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது

இம் முதியோர் இல்ல அமைப்பு வேலைகளை தமிழர் புனர் வாழ்வுக்கழகம் துரித கதியில் மேற்கொண்டு நிறைவேற்றியது.இப்பணிக்கு அரச திணைக்களம், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஆர்வம் கொண்ட மக்கள் கைகொடுத்து உதவியளித்தனர்.

1997 ஆம் ஆண்டு ஐந்து பேருடன் ஆரம்பமான முதியோர் இல்லம்-2000 ஆம் ஆண்டு எண்பத்தேழுபேரை பராமரிக்கும் நிலைக்கு உயர்ந்தது.

### முதியோர் இல்லத் தலைவர்

முதியோர் இல்லம் உருவானது முதல் இறக்கும்வரை முதியோர் இல்லத்தின் தலைவராக விளங்கினார். தனது வாழ்வில் மண்ணை, இனத்தை மிகவும் நேசித்தவர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவர்.

முதியோர் இல்லத்திற்கென இறுதிச்சடங்கை நடத்தக்கூடிய இடத்தினை தெரிவு செய்துவிட்டு வரும் வழியில் எதிர்பாராத விதத்தில் இடம்பெற்ற விபத்தில் காலில் காயம் ஏற்பட்டு- சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு-மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை, 18. 10. 2001 வியாழக் கிழமை அமரரானார்.

மண்மீது கொண்ட பற்றுக் காரணமாக அவரது பூதவுடல் கிளிநொச்சி மண்ணிற்கு எடுத்து வரப்பட்டு-இறுதிக் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன.

**க. இளங்கோ**
பொதுசுகாதார பரிசோதகர்

## அறிவு, ஆற்றல் ...

ளியும், இப்போது அதுவும் மாறிக் கலப்பட உலோகமும் காகிதமுமே அளவு கருவிகளாக நிற்கின்றன.

ஈயப்பணமும்,காகிதப் பணமும் வெளி மதிப்பு உள்ளவையே,அவற்றின் உள்மதிப்பு மிகக் குறைவு, அவை தன் மதிப்பினால் செல்லுபடியாவதில்லை அரசாங்க முத்திரையினால் செல்லுபடியாகிக் கொண்டிருக்கின்றன. இப்போது தன் மதிப்பினால் செல்லுபடியாகிக் கொண்டிருக்கும் ஒரே நாணயம் ஒற்றைக் காசுதான். அதன் உள் மதிப்பும் வெளிமதிப்பும் ஒன்றே, முன் வெள்ளியிலும், தங்கத்திலும், அச்சிடப் பெற்ற நாணயங்களின் உள் மதிப்பும் வெளிமதிப்பும் ஒன்றாகவே இருந்தன. காகிதப் பணம் அப்படியல்ல, அது பெருகப் பெருக அதன் மதிப்புக் குறையும், மதிப்புக் குறையக் குறைய ஒரு பொருளுக்கு அதிக காகிதப் பணம் கொடுக்க வேண்டி வரும். அதைக் காண்பவர் பொருள்களின் விலை ஏறிவிட்டதாகக் கூறுவர். இது தவறான கருத்து.

உண்மை என்னவெனில், 1931 முதல் இன்று வரை கடந்த பல ஆண்டுகளாக எந்தப் பொருளும் விலை ஏறவில்லை என்பதே, அன்றைக்கும் பவுணுக்கு 3 மூட்டை நெல், இன்றைக்கும் பவுணுக்கு மூன்று மூட்டைநெல். பவுண் 15 ரூபாவாக இருந்த போது நெல் மூட்டை 5 ரூபாவாக இருந்தது பின் பவுண் 30 ரூபாய் ஆன போது நெல் ரூபா 10. பவுண் 45 ரூபா ஆனதும்நெல்-15 பவுண் 60 ரூபா ஆனதும் நெல் ரூபா 20 பவுண் 90 ஆனதும் ரூபா 30 பவுணுக்கு மூன்று மூடை நெல் அப்படி விற்றது. இன்றும் விற்கிறது. இனியும் விற்கும்,

ஓர்ஏக்கர் நிலமுள்ள உழவன் தன் நிலத்தில் 30மூட்டை நெல் விளைவித்து 15மூட்டையைத் தன் செலவிற்கு வைத்துக் கொண்டு,மீதி15மூட்டை நெல்லை விற்று எல்லாப் பொருட்களையும் அன்றும் வாங்கினான்.இன்றும் வாங்குகிறான் எதுவிலை ஏறியது? நெல்லையோ,தங்கத்தையோ இணைத்துப் பார்க்கும்போது, எப்பொருளும் விலைஏறியதாகத் தெரியாது காகிதப் பணத்துடன் இணைக்கும் போதுதான் எல்லாப்பொருளும் விலை ஏறியதாகத்தோன்றும். இது பொய்த்தோற்றம், உண்மை என்னவெனில், காகிதப்பணத்தின் மதிப்புக் குறைந்து விட்டதுஎன்பதே. அன்று நமது நாட்டில் 150 கோடிரூபாய்க்குத் தங்கம் இருக்க, 300 கோடிரூபாய்க்குக் காகிதப்பணம் இருந்து வந்தது. அதே தங்கத்திற்கு 2100 கோடி காகிதப்பணம் இருக்கிறபொழுது, காகிதப் பணம் 1 க்கு 7 ஆகப் பெருகிவிட்டதால் ஒருகாசுப்பொருளுக்கு 7 காசும்,1 அணாவுக்கு 7 அணாவும், 1 ரூபாய்க்கு 7 ரூபாய்காகிதமும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

### தங்கமும் காகிதப் பணமும்

ஒருநாட்டின் காகிதப்பணம் வெளிநாட்டில் செல்லாது பிற நாடுகளிலிருந்துசாமான்களை வாங்கினால தங்கமாகவே கொடுக்கவேண்டும், தங்கம் குறைவாக உள்ள நாடுகள்தம் நாட்டில் விளைந்த அல்ல செய்த பொருள்களைக் கொடுத்துவரும். இது ஏறத்தாழப் பண்டமாற்று முறை போன்றதேயாகும். இறக்குமதியைக்கட்டுப்படுத்தி ஏற்றுமதியை விரிவுபடுத்தும் நாடுதான் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும்என்றாலும் அது உள் நாட்டுத்தேவையையும் நிரப்பி ஆகவேண்டும்.

பொருளாதார அறிவு மேலை நாடுகளிலிருந்து வந்த ஒன்று, அதற்குமுன நமது நாட்டில்பொருட் செல்வத்தின் மீது பற்றற்ற தன்மையும் அது அவனவன் தலைவிதிப்படி வந்துசேரும் என்ற கொள்கையுமே இருந்து வந்ததும். ஒருதனிமனிதனோ ஒருநாடோ தனது அறிவு ஆற்றல், ஊக்கம், உழைப்புஆகிய வைகளால் வேண்டிய அளவு பொருட் செல்வத்தைப் பெற முடியும் என்பதே பொருளாதார கலையின் முடிவாகும்.

செல்வங்களில் உயர்ந்தது பொருட் செல்வம். பணம் பத்தும் செய்யும், பணம்பதாளம் வரை பாயும். பணம்உள்ளான் படைக்கு அஞ்சான். பணம் உடையவர் பலவும் உடையவர். செல்வரை எல்லோரும் சேர்வர் சிறப்பு, ஆகவே, பொருளை நல்வழியில் தேடு, நல்ல வழியில்செலவிடு. அதிலும் சிக்கனத்தைக் கையாள். சேமித்து வை! அது பாதுகாத்து வை! இவை அனைத்தையும் எண்ணியே 'பொருள்தனைப் போற்றி வாழ்' என்றார்ஔவையார்.

'பணத்திலேஆசையொன்றிலேன்' என்பது இராமலிங்க அடிகளின் வாக்கு, ஏன்? பணத்திலே ஆசை வந்துவிட்டால் பிறசெல்வரை விடத் தமது செல்வம் குறைவாகத் தோன்றி உள்ளத்தை வருத்தி விடுமாம். பொருட்செல்வம் உண்மையான செல்வம்ஆவது எப்போது? 'தம்மின் எளியாரை நோக்கித் தமது உடைமை அம்மா பெரிது' என எண்ணி மகிழ்ச்சியடையும் போது தான் வாழட்டும் பொருட் செல்வம்! வளரட்டும் பெருஞ் செல்வம்.

## வேலணை மாணவர்கள் பாடசாலை செல்லும் மார்க்கமின்றித் தவிப்பு

(ஆனைக்கோட்டை)

வேலணை துரைச்சுவாமி மகாவித்தியாலய வீதியைத் திறக்குமாறு பாடசாலைச் சமூகமும், தீவக நலன்காப்பகமுமஇணைந்து கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி வீதியானது கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால் பாடசாலை செல்வதற்கு தற்காலிக பாதைஒன்றினை கடற்படையினர் அமைத்திருந்தனர்.

மேற்படி பாதையானது தற்போதைய மழைகாலப் பாவனைக்கு உகந்தது அல்லாததாகக் காணப்படுவதால் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.

தவிரவும், மாரிகாலம் ஆரம்பித்ததும் மாற்றுப் பாதை ஒன்றினை ஏற்பாடு செய்து தருவதாக கடற்படை அதிகாரி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுப்பிரதிநிதியிடமும், பாடசாலைச் சமூகத்திடமும் வாக்குறுதிவழங்கியிருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-201)

## இலங்கையர் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மணிலாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட 4 இலங்கையரை நினோய் அக்குவனோ சர்வதேச விமான நிலைய அதிகாரிகள் கடந்த திங்களன்று கைது செய்துள்ளனர் (உ)

## 6 முஸ்லிம் எம்.பிக்கள் பகிஸ்கரிப்பை கைவிட்டனர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் உட்பட அக்கட்சியின் 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் நேற்று முன் தினம் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ரவூப்ஹக்கீம், பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத், பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் அஸ்வர், ரிசாத் வதியுதீன், திடீர் தௌபீக், எம்.எஸ். தௌபீக் ஆகியோரே பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு வழங்குவது தொடர்பாக பிரதமர் உறுதிமொழி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் கட்சியின் 9 உறுப்பினர்கள் நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரித்து வந்தமை தெரிந்ததே. (உ-8)

## றெக்கிளமேசன் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் றெக்கிளமேசன் பகுதியில் மாநகரசபையின் குப்பை ஏற்றும் வண்டிகள் கடந்த ஒரு வார காலமாக செல்லாமையினால் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்குப்பைகள் மழை நீரினால் அழுகி துர்நாற்றம் வீசுவதாகவும்,

இதனால், அப்பகுதியால் செல்வோர் சிரமம் அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## அழிக்கப்பட்ட வீடுகளை மீளமைப்பதுபற்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக யாழ். மாவட்டத்தில் அழிக்கப்பட்ட சேதமாக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பது தொடர்பான யாழ்.மாவட்ட வீடமைப்புக் குழுக் கூட்டம் நாளை மு.ப. 10 00மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில்பொறியியலாளர்கள் வீடமைப்பு அதிகாரசபை மற்றும் கட்டடத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்
குறள்

# வலம்புரி

## பகிஷ்கரிப்பு கலாசாரம்

அகிம்சைப் போராட்டம், கௌரவத்திற்குரியது. அது மதிக்கப்பட வேண்டும். அகிம்சைப் போராட்டத்தை மதிக்கத் தவறும் பட்சத்தில் அதன் விளைவு பாரதூரமானதாக அமையுமென்பது வரலாறு நமக்குப் புகட்டும் பாடமாகும்.

எனினும் அகிம்சைப் போராட்டம் நடத்துவதற்கும் நியாயங்கள், முக்கியத்துவங்கள் இருப்பது அவசியமாகும் மக்கள்தமது பிரச்சினைகளை அகிம்சைவழியில் நின்று வெளிப்படுத்துவது அவசியமாகும்.

ஆயினும் சாதாரண விடையங்களுக்கெல்லாம் பகிஷ்கரிப்பு, போராட்டம் என்று தொடங்கிவிட்டால் வாழ்க்கையே போராட்டமாகிவிடும் இத்தகையதோர் போராட்ட உணர்வு மனித உள்ளங்களில் ஆழமாக பதிந்துவிடுமாயின் குடும்ப வாழ்க்கையிலும் அவை பிரதிபலிக்கவே செய்யும்.

உதாரணமாக சில பாடசாலைகளில் மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தமதுகற்றல் செயற்பாடுகளை நிறுத்தி நிபந்தனைகளை முன்வைத்து அவர்கள்நடத்துகின்ற பகிஷ்கரிப்புப் போராட்டங்களைப் பார்க்கும் போது வேதனையே மிஞ்சுகின்றது.

கல்விச் செயற்பாட்டில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டிய மாணவர்கள், தமக்குக்குருவாக அமைந்த ஆசிரியர்களுக்கே நிபந்தனை போட்டுக் கோஷம்எழுப்புமளவிற்கு நிலைமை படு மோசமாகிவிட்டது.

ஏதோ தொழிற்சங்கங்கள் போல் மாணவர்கள் செயற்படுவதை பெற்றோர் வெறுமனே பார்த்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. மாணவர் ஆசிரியர் உறவு முதலாளி - தொழிலாளி உறவன்று. அதுஆத்மார்த்தமான உறவு. அதைப் பேணுவது இருதரப்பினதும் மிக முக்கியமான பணியாகும்.

மாணவர்கள் தமக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் குறித்து அதிபருக்குப்பொறுப்பான ஆசிரியர்களுக்கு, தமது பெற்றோர்களுக்கு எடுத்துக் கூறி அடக்கமான தீர்வைக்காண்பதே நல்லது. மாணவர்கள் தமது கல்விக்கு இடையூறு விளைவிப்பதன் விளைவை இப்போதில்லாவிடினும் என்றோவொருநாள் வேதனையோடு உணர வேண்டிய கட்டம் ஏற்படவேசெய்யும்.

# அறிவு, ஆற்றல், ஊக்கம், உழைப்பால் பெறுகின்ற 'பொருட்செல்வம்' செல்வங்களில் உயர்ந்தது

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

செல்வம் பலவகை, அவைகல்வி, கேள்வி, அறிவு, அருள், பொருள் முதலியன, அவற்றிலுள்ள பொருளும் பலவகைஅவை, பொன், மணி முத்து, பவளம், பணம் முதலியன அவற்றிலுள்ள பணமும் பலவகை அவை செம்பு, ஈயம் வெள்ளி, பவுண், நோட் முதலியன, இவையே பொருட் செல்வம் எனப்பெறும்.

வாழ்வுக்குப் பொருள் தேவை பொருளற்றவாழ்வு வாழ்வாகாது.' அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகமும், பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகமும் இல்லை' என்பது வள்ளுவர் வாக்கு. எவராலும் பொருட்படுத்த முடியாத ஒருவர், எல்லோராலும் பொருட்படுத்தப்பட வேண்டுமானால் அவர் பொருளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் அவரது கருத்து

### ஈந்துவக்கும் இன்பம்

பொருளைத் தேடுவதும் தனக்காக என்றில்லாமல் பிறருக்காகவென்றும்தேடவேண்டும். அதையும் நல்ல வழியில் தேடி, நல்ல வழியில் செலவிட்டு நல்லமுறையில் வாழ்ந்தாக வேண்டும். பிறருக்குப் பயன்படும மக்கள் உளரில் பழுத்த கனிமரத்தை ஒப்பார். அல்லாதவர் பழுத்தும் பயன்படா எட்டிமரமேயாவர். ஆம் எட்டிபழுத்தென்ன? ஈயாதார் வாழ்நதென்ன?

பொருளற்ற மக்கள் பொருள பெற்ற மக்களிடம் சென்று இரப்பது இழிவு; இல்லை என்று வருகிற அவர்களிடம்' இல்லை' என்று கூறுவது அதைவிட இழிவு என்பது தமிழகத்தின் பண்பு.

ஓர் இடுகாட்டில் ஒரே நேரத்தில் இருபிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. அதைக் கண்ட ஒருபெரியவர் இவர் ஈந்துவக்கும் இன்பம் இன்னது என அறிந்து சுவைத்த செல்வர். இவர்அவ்வின்பம எப்படி இருக்கும்என்பதையே அறியாது வைத்து இறந்த வறுமையாளர் என்றார். பாவம் பணம் இழந்த பிணம்!

### சிக்கனமும் கருமித்தனமும்

தமிழ்ச சொற்கள் அனைத்தும் பொருளமைதியுடையன 'சுறுசுறுப்பு' என்பதும் படபடப்பு என்பதும் ஒன்றல்ல. அருஞ் செயல்களைப் பொழுதை வீணாக்காமல் அமைதியாகச் செய்து முடிப்பவனே சுறுசுறுப்பாளன் அதிகமாய்த்துடித்துஎதையும்செய்ய இயலாமல் துன்பப்படுகிறவன் படபடப்புக் காரன். 'சிக்கனம்' என்பதும் கருமித்தனம் என்பதும் இதுபோன்றதே. தேவைக்கு மேல்செலவு செய்வது வீண்செலவு தேவையின் அளவு செலவு செய்வது சிக்கனம். தேவைக்கும்செலவு செய்யாதது கருமித்தனம். இவற்றில் பொருட் செல்வம் பெறத் தேவையானது சிக்கனம்' ஒன்றே.

மாதம் 100ரூபா வருமானம் உள்ளவர்கள் வீட்டு வாடகை 10. அரிசிரூபா 15, பல சரக்கு, ரூபா 15, காய்கறி ரூபா 8, பால் ரூபா 8, பலகாரம் ரூபா8, எண்ணெய் ரூபா 5, விறகு ரூபா 5, வரட்டிரூபா2, விளக்கு ரூபா 2, துணிக்வைக்க ரூபா3 சவரம் ரூபா2, துணிக்காக ரூபா 5, இதர செலவுகளுக்காகரூபா7, மீதம் ரூபா5, எனத்திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும். திட்டமில்லாத குடித்தனமும்குறிக்கோளில்லாதவாழ்க்கையும ஒரு போதும் சீரடையாது. சிலர் இத்திட்டத்தையே தங்கள் இருப்பிடத்துக்குத் தக்கவாறும் குடும்பத்துக்கு ஏற்றவாறும் மாற்றியமைத்துக் கொள்ளலாம். திட்டமிட்டு வாழ்க்கை நடத்துகிறவர்கள்மீதப்படுத்த முடியாமற் போனாலும், கடன்காரர்களாக வாழமாட்டார்கள் என்பது உறுதியாகும்.

### சேமிப்பும் அதன் பாதுகாப்பும்

ஒருவனுக்குப் பொருள் வந்து சேருவது திடீரென வந்துவிடாது. சிறுகச் சிறுக வந்து பின்பெருஞ் செல்வமாகக் காட்சியளிக்கும். போகும்போது சிறுகச் சிறுகப் போகாது ஒரேயடியாய்த் திடீரெனத் தொலைந்துபோய் விடும், ஒரு நாடகக் கொட்டகைக்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து, பெருங்கூட்டமாகக் காட்சியளித்துப் பின் ஒரேயடியாகக் கலைந்து ஒழிந்து போய் விடுவதைப் போல.

பொருட் செல்வம் பெற விரும்புகிறவர்களுக்குச் 'சிக்கனமும்' சேமிப்பும் மட்டும் போதாது. அவர்கள்சேமித்த செல்வத்தைப் பாதுகாத்தும் ஆகவேண்டும். சேமிப்பு ஒரு கலை சிக்கனம்அதன் துணைக் கலை. பாதுகாப்பதோ பெருங் கலை.

பல ஆண்டுகள் சேர்த்த செல்வத்தைப் பாதுகாக்கத் தெரியாமல் இழந்துவிட்டவர்பலர். இவர்களிற் பெரும் பான்மையோர் நீண்டகாலம் உழைத்து ஓய்வுபெற்று உதவி நிதிபெற்றோர். உலகம் இன்னது என அறியாமல் உத்தியோகத்திலேயே உழன்று வாழ்ந்து வந்தவர்கள உலகம இன்னது என நன்கறிந்த வஞ்சக மக்களின் சொற்களில ஏமாந்து விடுவது இயல்பேயாகும், உதவி நிதி பெற்றோர் தாம் வாங்கிய தொகை அனைத்தையும் அன்றே ஒரு பெரிய வங்கியிற் போட்டுவைத்துப் பின் அத்தொகையை 5 பங்குகளாகப் பிரித்து 2பங்கிற்கு வீடும், ஒரு பங்குககு நிலமும், ஒரு பங்குக்கு ஆலைப்பங்குகளும நல்லவைகளாகப் பார்த்து வாங்கி வைப்பதுடன், மீதியுள்ள ஒரு பங்கு பணத்தில்அரைப்பங்கு, ரொக்கமாகவும் அரைப்பங்கு தங்கமாக்வும வைத்திருந்து பாதுகாப்பதே சிறந்த கலையாகும், வாங்கிய தொகை 25 ஆயிரமாக இருந்தால், இது 10, 5, 5, $2\frac{1}{2}$, $2\frac{1}{2}$, எனப்பிரியும்.

வியாபாரியாகவோ, தொழில் துறையினராகவோ இருந்தால் அவர் தம்மிடம் உள்ள தொகையைப் பத்துப் பங்குகளாகப் பிரித்து, 5 பங்கைத்தொழிலிலும்இரண்டுபங்கைவீடுகளிலும, ஒரு பங்கை நிலத்திலும ஒருபங்கைப் பாங்குகளிலும், அரைப்பங்கைத்தங்கத்திலும், போட்டு, அரைப்பங்கை ரொக்கமாகவும் வைத்திருக்க வேண்டும். அவருடைய மூலதனம் 100 ஆயிரமாகஇருந்தால்அது 50, 20, 10, 10, 5, 5 எனப்பிரியும். கம்பெனியின் பங்குகள் அனைத்தையும் ஒருதுறையிலேயேவாங்கவிடாமலபாங்க். நூல், சர்க்கரை, துணி, தோட்டம், இயந்திரம் ஆகிய பல துறைப் பங்குகளாகவும் பார்த்து வாங்கிவைப்பது நலமாகும். இம்முறையானது வஞ்சக மக்களிடமிருந்து நம்மைப பாதுகாத்துக் கொள்ள மட்டுமல்லாமல், ஒரு திடமான கொள்கையில்லாத மக்களால் ஆட்சி செய்யப் பெறுகின்ற அரசாங்கத்தின் போககுகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ள உதவும். ஒரு துறை தாழ்த்தி விட்டாலும் மற்றொருதுறை உயர்த்திவிடும். எந்த முறையிற் பார்த்தாலும் இதைவிடச் சிறந்த பாதுகாப்புக்கலை இப்போது இல்லை.

### பொது வாழ்வில் பழிக்கு அஞ்சுதல்

திடீரென வருமானம் குறைந்து விட்டால் அல்லது தடைப்பட்டுவிட்டால்எவரும் வருத்தப்பட வேண்டியதில்லை. வருந்தியும் பயன் இல்லை. அவர்கள் உடனே செய்யவேண்டியதுசெலவினத்தைக்குறைத்துக் கொள்வது தான் ஒருகுளத்திற்குத் தண்ணீர் வரும் வழி அடைபட்டுப் போனால், அக்குளத்தின் வடிகாலை உடனே மூடவேண்டியதுதான் சிறந்த வழி. வரவே சிறுத்துச் செலவே பெருத்தால் அதுவே அழிக்கும் அவனை.

ஒருவன் தனக்கு வருகிற வருமானத்திலும் செலவிலும், சேமிப்பிலும், பாதுகாப்பிலும் செலுத்துகிற கருத்தைவிட, தான் சார்ந்திருக்கிற ஒரு பொது அமைப்பிற்கு வருகிற வருமானத்திலும், செலவிலும், சேமிப்பிலும், பாதுகாப்பிலும் அதிகமாகக் கருத்தைச் செலவிட்டாக வேண்டும், இன்றேல் பழிதாங்க முடியாத அளவிற்கு வந்துவிடும், அத்தகைய மக்கள் பொது வாழ்வில் தோன்றுவதை விடத் தோன்றாதிருப்பதே நல்லது.

ஒரு தனிமனிதன் தவறான வழியில் பொருள்சேர்க்க எண்ணிவிடக் கூடாது; ஏனெனில், அழ அழக் கொண்ட அது அழ, அழப் போய்விடும், அவ்வாறே ஒரு அமைப்பும் பொதுமக்களைத் துன்புறுத்திப் பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது, ஏனெனில் ஏழை அழுத கண்ணீர் கூரியவாளாக மாறிவிடும் பின் அது எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும் அழிந்தொழிந்து போய் விடும்.

பொது வாழ்வில் ஈடுபடுகிறவர்களுக்கு உயர்ந்த மனப் பான்மையும், உறுதியான கொள்கையும் தேவை, சொந்த உழைப்பினால் வரும் வருமானத்தில உண்டுவாழும் மக்களே பொதுவாழ்விற்குத் தேவை, பொதுவாழ்விலேயே வயிறு கழுவி வாழும் மக்களைக் கொண்ட நாடு ஒரு பொழுதும் வாழாது. ஆகவே, ஒருவருக்குத்தன் வாழ்விற்காகவும், பொதுவாழ்விற்காகவும் பொருட்செல்வம் கட்டாயம் தேவை. தனிப்பட்டவர்க்குத் தேவைப்படுவது போலவே, ஒரு நாட்டிற்கும் பொருளாதாரம் தேவை.

### பொருளாதாரக் கொள்கை

பொருளாதாரக் கொள்கைகளைப் பித்தலாட்டக் கொள்கைகள் எனச் சிலர் கூறுவதுண்டு; அதுதவறு. அவ்வாறு குறைகூறப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு, ஒன்று பொது மக்களுக்கு இன்னதென்றே விளங்காதது, மற்றொன்று பொருளாதாரப் பேரறிஞர்களிடமிருந்தே மாறுபட்ட கருத்துக்கள் வந்து கொண்டிருப்பது.

பழங்காலத்து மக்களுக்குப் பணம் தேவையில்லாதிருந்தது. அவர்கள் தம்மிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து தேவைப்படும் பொருட்களை வாங்கி வந்தனர். இதற்குப் பண்டமாற்று முறை எனப் பெயர். காலப் போக்கில் தம்மிடம் உள்ள பொருள்களைத் தேவைப்படாத பொருள்களுக்கும் விற்க வேண்டி வந்ததால், பொருள்களின் அளவுகருவியாக எல்லோருக்கும் தேவைப்படும். ஒரு பொருள் நிற்க வேண்டி வந்தது. முதலில் நின்றது நெல், அடுத்து நின்றவை ஆடு, மாடுகள், பின் இரும்பு, செம்பு முதலியவை, இறுதியாகப் பொருட் செல்வத்தின் அளவு கருவியாக நின்றவை பொன்னும், வெள்

(8-ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



பிரசாதம் எனப்படுவது கடவுள் திருப்திப்படும்போது அவரிடமிருந்துவெளிப்படும் திருவருளாகும், எனது அனுக்கிரகம் எப்பொழுதும உங்களுடனிருக்கும். அது கொடுக்கப்படும் பொருளோ வாங்கப்படும் பொருளோ அன்று. அது எப்பொழுதும் வழங்கப் பட்டு, அதன் குறிப்பையுணர்ந்த உள்ளுணர்வினால் ஏற்றுக் கொளளப் படுவதொன்றாகும். உங்கள் அந்தராத்மாவின் கிருபையை வென்றெடுங்கள்.

அதனால் அந்தராத்மா என்றும், பெறக்கூடிய இறைவன் கருணையைப் பெறக் கூடியதாயிருக்கும். கடவுள் எவருக்கும் இல்லையென்றுசொல்வதில்லை. நீங்கள்மட்டும் தான் இறைவனை மறுக்கிறீர்கள்; உங்களுக்கு ஒரு வெகுமதி கொடுக்கப்படும் பொழுது அதைப் பெறுவதற்கு நீங்கள் ஒரேயொரு சிறிய செயலைத்தான் செய்ய வேண்டும். அதைப் பெற்றுக் கொள்ள உங்கள் கையை நீட்டுவதே அச்செயலாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்று பாராளுமன்றில் இருந்து வெளிநடப்பு

(கொழும்பு)

திருக்கோயில் காஞ்சிரங்குடா மற்றும் திருகோணமலை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளையில் ஜே.வி.பி. மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனத தெரிவித்து தமிழக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரளுமன்றத்திலிருந்து நேற்று வெளிநடப்பு செய்துள்ளனர்.

இந்த பிரேரணையை ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் சுனில் கதும்கெற்றி சமர்ப்பித்திருந்தார். இப் பிரேரணை மீது உரையாற்றுவதற்கு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரம் வரை உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இதனை அடுத்து கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரும் சபையிலிருந்து வெளியேறினர்.

தமிழர் பிரதிநிதிகளாகிய தமக்கு பாராளுமன்றில் பேசுவதற்கு நேரம வழங்கப்படாமைக்கு கூட்டமைப்பு தரப்பில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

(த5)





தலைவர் பிரபாவுடன் தூதுக்குழுவினர் சந்திக்கும் காட்சி

## விஷமிகள் புதைத்த மிதிவெடியில் சிக்கிய மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

விளாம்பழம் பறிப்பதற்காச் சென்ற 9 வயது மாணவன் ஒருவன் மிதிவெடியில் சிக்கி இரண்டு கால்களிலும் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப்பிற்பகல் 2மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மாணவனான கிறிஸ்தோபர் ஸ்ரெனியஸ் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவ இடத்தைப் பொலிஸார் பார்வையிட்டதுடன் அப் பகுதியில் மிதிவெடி அபாயம் ஏற்கனவே இருக்கவில்லை என்றும் மிதிவெடி புதைக்கப்பட்டு மண்ணால் மூடப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தால் கரவெட்டிப் பகுதியில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் இச் சம்பவத்திற்கு பகைமையுணர்வே காரணம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவன் மந்திகை மருததுவ மனையில் அனுமதிக்கப்பட்டு நேற்றைய தினமே யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(த-41,23)

## மிருசுவில் படுகொலை வழக்கு 27ந் திகதி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் படுகொலை வழக்கு எதிர்வரும் 27ந் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபடவுள்ளது.

இக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள 5 இராணுவ சந்தேக நபர்களுக்கும் உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இந்த 5 சந்தேக நபர்களும் 27ந் திகதி நீதிமன்றில் ஆஜர் ஆக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ம

## கேபிள் புதைக்க வெட்டிய கிடங்கால் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரெலிக்கொம் நிறுவனத்தினரால் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கென நிலத்தடியில் கேபிள்கள் புதைப்பதற்காக வெட்டிய கிடங்கினுள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் வண்டியொன்று புதைந்து விபத்துக்குள்ளானதால் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று பிற்பகல் போக்குவரத்து சில மணி நேரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

தொலைபேசி இணைப்புக்கான கேபிள்கள் புதைக்கப்பட்ட இடத்தில் வெள்ளம் தேங்குவதால் அவ் இடத்தில் பஸ் வண்டிகளின் சில்லுகள் புதைந்து விபத்தில் சிக்க நேரிடுகிறது.

## தலைவர் பிரபா.....

மட்டக் குழு சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

இப் பேச்சுவார்த்தைகளின் [illegible]து விடுதலைப் புலிகளின் [illegible]பில் தலைவர் வே.பிரபாகரன் [illegible]களின் அரசியல் ஆலோ[illegible] பாலசிங்கம், அரசி[illegible]பொறுப்பாளர் சு.ப.தமி[illegible]செல்வன். திருமதி அடேல் பால சிங்கம் ஆகியோரும்,

நோர்வேயின் உயர் மட்டக் குழுவில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸனுடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்கைம் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர்கள் லிடா மற்றும் ஹென்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் 3மணித்தியாலம் வரை நடைபெற்ற இப் பேச்சு வார்த்தையின் போது, வடக்குக் கிழககுப் பகுதிகளில் தற்போது ஏறபட்டுள்ள நிலைவரங்கள் தொடர்பாகவும், மனிதாபிமான புனர்வாழ்வு வேலைகள் மேற் கொள்வதற்கான அரசு-புலிகள் இணைந்த கூட்டுச் செயலணி குறித்தும், தாய்லாந்தில் இம் மாதம் 31ம் திகதி நடை பெறவிருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை, அதற்குரிய நிகழ்ச்சி நிரல மற்றும் போக்குவரத்து நெருக் கடிகள் என்பன குறித்தும் விரிவான முறையில் ஆராயப்பட்டது.

ஏ-9 கண்டி வீதியூடாக பயணத்தை மேற்கொண்டிருந்த நோர்வேயின் பிரதி அமைச்சர் ஹெல்கீஸன் தலைமையிலான உயர் மட்டக் குழுவுக்கு தமிழீழ காவல்துறையின் சிறப்புப் பிரிவினர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

நேற்று வன்னியில் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்ட அமைச்சர் குழு ஏ-9 பாதையூடாக வவுனியா சென்று பின் அங்கிருந்து விமானப்படைக்குச் சொந்தமான விஷேட உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு சென்றனர்.

(ம)

## நோர்வே.......

இச்சந்திப்பை அடுத்து ஹெல்கீசன் தலைமையிலான குழுவினர் இன்று மாலை நோர்வேயிற்க்கு பயணமாகவுள்ளனர்.

(த)

## புளொட் உறுப்பினர் வைத்திருந்த துப்பாக்கிக்கு அனுமதி உண்டாம்

### நீதிமன்றில் யாழ்.பொலிஸார் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் முன்பாக விடுதலைப்புலிகளால் கைத்துப்பாக்கியுடன் பிடிக்கப்பட்ட புளொட் அமைப்பின் உறுப்பினர் சபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன் நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது தாம் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் பாலாலி இராணுவத்தளபதியின் அனுமதியுடனேயே கைத்துப்பாக்கியை வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

நேற்றைய தினம் அவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது சட்டவைத்திய அதிகாரியினால் நீதிமன்றத்திற்கு வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்து. அவ் அறிக்கையில் சந்தேக நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை பலாலி இராணுவத் தளபதியினால் கைத்துப்பாக்கி வைத்திருப்பதற்கான அனுமதி 2001ம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டதாக யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிக்கை சமர்ப்பித்தார்.

இதனை அடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 6ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன் பருத்தித்துறை நிதிமன்றில் சந்தேக நபரை ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

(த-6)

### 13 வருடங்களுக்கு முன்னர்

## காணாமல் போன வட்டக்கச்சி இளைஞர் களுத்துறைச் சிறையில்

(வவுனியா)

கடந்த 13வருடங்களுக்கு முன்பு காணாமல்போனதாக கருதப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1989ம் ஆண்டு இந்திய அமைதிப்படை இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் கிளிநொச்சி வட்டக்கச்சியைச்சேர்ந்த இளையபெருமாள் பத்மநாதன் என்பவரே காணாமல் போயிருந்தவரவார். இவர் காணாமல் போனமை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டு தேடுதல் நடைபெற்ற போதும் கண்டு பிடிக்கப்படவில்லை.

கடந்த ஒரு வாரத்திற்கு முன் இவரது தாயார் இளையபெருமாள் லட்சுமி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்த புகாரை அடுத்து அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பயனாக இந்த இளைஞர் களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(ம)

## பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

### விவாதத்திற்கு எடுக்க 5கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு ஐந்து அரசியல் கட்சிகள் பிரதமரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாசக்கட்சி, மகஜன எக்ஸப்பெரமுன ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவே இந்தக்கட்சிகள் ஆகும்.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி இப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்[illegible]திலும் அரசாங்கம் விவா[illegible]கான திகதியை நிர்ண[illegible]வில்லை என்று இக்கட்சிகள் கூறுகின்றன.

இதேவேளை அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களை தடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிட்டார் என்று இக்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

(ந-5)

## மரண அறிவித்தல்

### திருமதி சபாரத்தினம் இலட்சுமி அம்மா

கருங்காலி – காரைநகர்

காரைநகர் கருங்காலியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சபாரத்தினம் இலட்சுமி அம்மா 23.10.2002அன்று பி.ப 1 மணியளவில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற சபாரத்தினம் (முன்னைநாள் கா.பொ.பிறதேர்ஸ் உரிமையாளர், பதுளை முன்னாள் கருங்காலி முருகன் கோவில் தர்மகர்த்தா) என்பவரின் பாசமிகு மனைவியும், செந்தில் நாதனின் அன்புத்தாயாரும்,தேவமலரின்(சமுர்த்தி அலுவலர் காரை தென்மேற்கு, பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை) அன்பு மாமியாரும், பிரசாந்தன், கஜரூபன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.10.2002 வியாழன் 12மணியளவில் கருங்காலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்
ச. செந்தில்நாதன்
(மகன்)

### மிதிவெடி அகற்றப்பட்ட நிலத்தைக் கையளிக்கும் வைபவம்

அன்புடையீர்!

இன்று (24.10.2002) வியாழக்கிழமை காலை 10மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மற்றும் பெரியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு: யாழ். செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் தயவு செய்து நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

*தொலைபேசி இல: 021–222 3886*

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும், விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 15.11.2002
சந்தர்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.
-- இயக்குநர்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.